
# திருக்குறள் - நூற்பா

## [குட்டிக் குறள்]





சுகவனம்:
சிவப்பிரகாசம்

# திருக்குறள்-நூற்பா

[ குட்டிக் குறள் ]

*

சுகவனம் - சிவப்பிரகாசனூர்
இயற்றியது

*

விற்பனை உரிமை :

**பாரி நிலையம்**

59. பிராட்வே, சென்னை-1.

முதற் பதிப்பு: ஜனவரி 1961

உரிமை: ஆசிரியர்க்கு.

தனிப்பிரதி ரூ 1.13

பரிசுப் பதிப்பு ரூ 1.75

பதிப்பாளர்:

**ஜகதா & சன்**

376, திரு. வி. க. நகர்,

சென்னை-11.

நேரு அச்சகம், பிரம்பூர், சென்னை 11.

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| ஓர் எச்சரிக்கை | பதிப்பாளர். | 4 |
| பதிப்புரை | ,, | 5 |
| **PREFACE** | **M. V. G.** | 7 |
| முகவுரை | பரலி. சு. நெ. | 8 |
| முன்னுரை | கி. ஆ. பெ. | 9 |
| மணிமொழி வாழ்த்து | திரு. வி. க. | 13 |
| ,, | சி. குரு. | 14 |
| ,, | அ. வரத. | 15 |
| **Author's Note** | ... | 17 |
| நூல்: | | |
| பதிகம் | ... | i |
| அறம் | ... | 1 |
| பொருள் | ... | 16 |
| இன்பம் | ... | 44 |
| அதிகார அடைவு | ... | 57 |
| பிழை திருத்தம் | ... | 58 |
| கருத்துக் கதிர்கள் | ... | 59 |

நூல் கள்வர்க்கு

# ஓர் எச்சரிக்கை

நீண்டகாலப் பெரு முயற்சியாலும் பேருழைப்பினாலும் பெருஞ் செலவாலும் வெளிவரும் இந்நூலின் ஒவ்வோர் எழுத்தும் சொல்லும் கணக்கறிந்து கொள்ளப்பட்டவை. இந்நூற்பாக்கள் பொது மக்களால் மனப்பாடம் செய்து கொள்வதற்கே உரியன. அன்றி இந்நூற்பாக்களின் எழுத்தையோ சொல்லையோ எவரும் தம் விருப்பப்படி திருத்துவதோ மாற்றுவதோ செய்தல் கூடாது. இந் நூல் ஆசிரியர் பதிப்பாளர்களாகிய எம்மிடம் எழுத்து மூலம் அனுமதி பெற்றாலன்றி இந்நூற்பாக்களின் எந் தப் பகுதியையும் அங்ஙனம் செய்தலும் பெயர்த்துப் பதிப்பித்தலும் நல்லொழுக்கத்திற்கும் சட்டத்திற்கும் ஒருங்கே விரோதமானது.

எமது 'சுகவழி' நூல் இங்ஙனம் பேர் இடர்ப்பாட்டுக்கு உள்ளாகியதாலும், சட்ட நடவடிக்கை எடுக்க நேர்ந்த தாலுமே இவ்வித எச்சரிக்கை தமிழ் நாட்டில் இன்றிய மையாததாகின்றது. மீறுவோர் எமது நஷ்டத்திற்குப் பொறுப்பேற்க வேண்டியவர் ஆவர் என்பதை இதனால் கண்டிப்பாய் அறியவும்.

—பதிப்பாளர்

உருவெடுத்தது. இக்குட்டிக்குறள் ஏழுசீர்கொண்ட திருக்குறளின் கருத்துக்களை நான்கு சீரில் ஏந்தி வந்தது. 'கொன்றை வேந்தன் பாணியில் அமைந்த உலகியல் நூல் இது' என்று டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் பாராட்டினார்கள். ஞானியாரடிகள், யாழ்ப்பாணத்துப் பண்டித மயில்வாகனனார் என்னும் விபுலானந்தர், கா.ரா. நமசிவாய முதலியார், கோ. வடிவேலு செட்டியார், சர். ஆர். கே. சண்முகம் செட்டியார், மறைமலையடிகளார் மற்றும் பேரறிஞர்கள் பலரும் அந்நாளிலே வாழ்த்துரை வழங்கியுள்ளார்கள்.

சில ஆண்டுகட்கு முன்பு அறத்துப்பால் மட்டும் உரையுடன் 'அறநூ'லாக வெளிவந்தமை தமிழுலகு நன்கறியும். இதோ முழுநூலும் இப்போது வருகின்றது.

அறிஞர் பெருமக்கள் அளித்துள்ள முகவுரை முன்னுரை முதலியன இந்நூலை மேலும் அழகுபெறச் செய்கின்றன. ஆசிமொழிகள் வழங்கிய அப்பெரியார்கட்கு எங்கள் உளங் கனிந்த நன்றியும் வணக்கமும்.

இந் நூல் வெளியீட்டு விழாச் சிறப்பினை உவந்தேற்ற எம் நாட்டவர்-சேலம் செவ்வைத் 'திருக்குறள்கழக'த்தார்க்கு யாம் என்ன கைம்மாறு செய்ய வல்லேம் ? எமது நூல்கள் என்றும் அழகிய வடிவில் துலங்கத் துணைபுரியும் சென்னை 'பாரி நிலைய'த்தார்க்கும் குறித்த காலத்தில் இதனை அச்சிட்டு உதவிய 'நேருஅச்சக'த்தார்க்கும் எங்கள் உளமார்ந்த நன்றி.

வழக்கம்போல் எமது நூல்களைத் தமிழகம் விரும்பி வரவேற்குமாக !

வணக்கம்

வாழ்க தமிழ்மறை !

வளர்க உயிரிரக்கப் பெருங் கருணை !!

சென்னை,
27—1—1961

சிவ. மாசிலாமணி

# PREFACE

**SRI M. V. GOPAL CHETTIAR,**

Hon. Secretary, District chamber of commerce and

Member, R. U. C. committee, Salem.

Vidwan Sri Sivaprakasanar's great gift to Tamil Nad and one and all of the humanity is "The Kutti-kural" an abridged able treatise of the divine treasure 'The Kural' of the Maharishi Thirualluvar. Our women and men and children must make this "Kural Sangraham" thier own in thier daily life. If this is done all evil will fly away and our Barath will shine forth and flourish with the Lord's ever lasting bliss.

Sri S. Masilamani the blessed son of sri. Sivapraka sanar is to be congradulated as he is truly treading the path of his great father in bringing out this "Life's Nectar" for the emancipation of "Hridaya Paripakam" and "Mano Paripakam" of our people. We are proud of Sri, Sugavanam-Sivaprakasanar as his Janma Bhumi is Salem the birth place of the great patriots.

4. Venkatrao Road<br>SALEM.<br>15-1-1961.

M. V. Gopal

பழம்பெருந் தேச பக்தரும்

அமரகவி-பாரதியாரின் உயிர்த் தோழரும்

முதுபெரும் புலவருமான

பரலி சு. நெல்லையப்பர் அவர்கள்

வழங்கிய

## முகவுரை

தெய்வத் தமிழ்மறை யென்றும் உலகப் பொதுமறை யென்றும் போற்றப்படும் திருக்குறளின் வழிநூல்களாகவும் சார்பு நூல்களாகவும் இதுவரை எத்தனையோ நூல்கள் வெளிவந்திருக்கின்றன. அத்தனைக்கும் முதன்மையாக, எனது பழைமையான நண்பர் சுகவனம்-சிவப்பிரகாசனார் 'குட்டிக் குறள்' என்ற பேருடன் ஒரு நூலை இயற்றியுள்ளார்.

திருவள்ளுவர் ஒன்றே முக்கால் அடியில் இயற்றியருளிய திருக்குறளின் கருத்தை எல்லோரும் எளிதில் உணரும்படி எனது நண்பர் ஒரே அடியில் சுருக்கி அமைத்திருக்கின்றார்.

பலநாள் உழைப்பின் பயனாக வெளிவரும் இவ் அரிய நூலைத் தமிழ் உலகம் விரும்பி ஏற்றுக்கொள்ளு மென்று நம்புகிறேன். ஓரடிக் குறளைப் படிப்பவர்கள் ஒன்றே முக்காலடித் திருக்குறளையும் படித்துப் பயன் அடைதல் வேண்டும் என்பது எனது விருப்பம். இந்த நூலை இயற்றிய ஆசிரியரின் கருத்தும் அதுவேயாகும்.

திருக்குறள் பயிற்சி பெருக!

திருவள்ளுவர் திருநாமம் வாழ்க!!

சென்னை
குரோம் பேட்டை
25-1-1961

*பரலி- சு. நெல்லையப்பர்*

# முன்னுரை

'முத்தமிழ்க் காவலர்'

திருச்சி - கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள்

திரு. சுகவனம்-சிவப்பிரகாசனுர் ஒரு அருந்தமிழ்ப்புலவர். ஆசிரியராகப் பல்லாண்டு பணிபுரிந்து, ஆட்சி புரிதற்குரிய மக்கள் பலரைத் தோற்றுவித்த அறிஞர் பெருமகனுர். ஒரு தமிழ்ப் புலவருக்கு மகனுகப் பிறந்து, தானும் ஒரு தமிழ்ப் புலவராக வாழ்ந்து, மற்ெருரு தமிழ்ப் புலவனை மகனுகவும் பெற்ற ஒரு தமிழ்ச் செல்வர்.

எல்லோரும் திருக்குறளை "குறுகியது" என எண்ணினர். அறிஞர் சுகவனம்-சிவப்பிரகாசரது உள்ளம் ஒன்றே அதைப் "பெரியது" என எண்ணியது. அதன் விளைவே குட்டிக் குறள்.

திருமால் இரண்டடியால் உலகளந்தார். திருவள்ளுவர் ஒன்றே முக்காலடியால் உலகளந்தார் என்பதானுல், சிவப் பிரகாசர் "ஓரடியால் உலகளந்தார்" எனக் கூறலாம்.

நூலின் நடை பழைய நடை. நூலும் பழைய நூல் களைப் போன்றது. ஆசிரியர் "கிளிக்காட்டு இறையனு"ரும் பழந்தமிழ்ப் புலவர்களோடு வைத்து எண்ணப்பட வேண்டி யவர்.

"அடுத்த தலைமுறை வரை நிலைத்து நிற்கும் நூல் ஒன்றை இத்தலைமுறையினர் எழுதுவதில்லை" என்ற குறையை இக்குட்டிக் குறள் போக்கிவிட்டது.

சில குட்டிக் குறள்கள் குறளுக்கு ஏழுசீர் தேவையில்லை எனவும் எண்ணச் செய்கின்றன. எழுசீர்க் கருத்தில் எதையும் விடாமல், நாற்சீரில் அமைத்தது நற்றமிழ்ப் புலமையே! அதிலும் இறுதிச் சீர்க்குள்ள வலிமை எச்சீர்க்குமில்லை. அதுதானும் உயிர் பெற்று ஒளி வீசுவதோடு மற்ற சீர்களுக்கும் உயிரூட்டிக்கொண்டிருக்கிறது. இவ் உண்மையை 13. நடுவு நிலையிலுள்ள என்ப, உறுதி, ஆக்கம், அறிப, அணியே, அறிக, வையார், பெரியார், நடுவு, பேறு ஆகிய பத்துச் சீர்களையும் வெட்டியும் ஒட்டியும் வைத்து உணர்ந்து மகிழலாம்.

குறளும், குறட் கருத்தும், குறள் நெறியும் தமிழகத்தில் எளிதிற்பரவ இந்நூல் பெரிதுந் துணைசெய்யும். ஆசிரியரது புலமைக்கும் அவரது தொண்டுக்கும் எனது நன்றியும், வணக்கமும்.

தமிழக மக்கள் இதனையும், இதுபோன்ற அருந் தமிழ் நூல்களையும் பயன்படுத்திப் பயனடைந்து வருவது தமிழுக்கும் தமிழருக்கும் தமிழகத்திற்கும் நலந்தருவதாகும்.

வாழ்க தமிழ்! வளர்க குறள்நெறி!

திருச்சிராப்பள்ளி-8.
தி. வ. 1992, தை, 1.

தங்களன்பிற்குரிய
**கி. ஆ. பெ, விசுவநாதம்**

வெள்ளி வியாழம் விளங்கிரவி வெண்திங்கள்
பொள்ளென நீக்கும் புறஇருளைத்—தெள்ளிய
வள்ளுவர் இன்குறள் வெண்பா அகிலத்தோர்
உள்ளிருள் நீக்கும் ஒளி.

-மதுரைப் பாலாசிரியனார்

# மணிமொழி வாழ்த்து

[ ஆசிரியப்பா ]

* சிறப்புடை மரபிற் பொருளு மின்பமும்
அறத்து வழிப்படூஉந் தோற்றம் போலத்
திருக்குறள் நூற்பாத் தெளிவுற வாக்கினன்
இளந்திரு வள்ளுவ னென்ன
வளந்தரு சிவப்பிர காசநா வலனே.

— திரு. வி. க.
*1940.*

* அறமாம் துன்னூசி வழியே பொருள் இன்பமென்னும் ஈரிழைகள் செல்வதொப்ப, ஈரடிக் குறட் கருத்துக்க ளெல்லாம் இவ்வோரடி நூற்பாவில் பயின்றுள்ள திறம் வியந்தவாறு.

காம்பீலிச் சீர் கருணீகர்

சேலம் - ப. கு. சின்னைய பிள்ளையவர்களின் முதன் மகனரும்

இந்நூல் ஆசிரியரின் மூத்த தமையனரும்

மஞ்சாரஹள்ளி கர்ணமும் ஆகிய

திருமிகு சி. குருசுவாமி பிள்ளையவர்கள் வழங்கிய

நேரிசை வெண்பா

விந்தைஎனக் கற்ரூேர் வியக்கும் திருக்குறள்நம்
சிந்தையுறக் குட்டிக் குறள்செய்தான்—எந்தை
தவப்பயனல் தோன்றும் தமிழாசிரியன்
சிவப்பிரகா சக்கவிஞன் தேர்ந்து.

ஆசிரியர், புலவரேறு

## அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள்

அருளிய

### ஆசிரியப்பா

திருவளர் மார்பத் தருண்மிகுங் கடவுள்
நசைமிகும் பெற்றியி னசுரரை வரைந்தனன்
அன்றுவான் புலவர்க் கென்றுபாத் தீத்த
கடல்வா யமிழ்த முடல்வளர்ப் பதலால்
உயிர்க்கோர் சிறிதும் பயப்பா டிலதெனூஉ
மன்பதைக் கெல்லா மின்புறப் பொதுமையிற்
றென்றுமுதிர் பெருமைத் தென்றமிழ்ப் பாற்கடல்
உளைவற வீன்ற விளைசுவை யமிழ்தமாய்த்
தமிழ்மான் முடியோ வுமிழ்சுடர்க் கலனே
கழுத்துறு நன்முடி யழுத்துமங் கலமோ?
நேருமா மூலமே லாரமோ வல்லதை
மற்றைய மொழிகளின் பெற்றிமை யடிப்பட
வுலவுயி னுயரிய நலமிகு கொடியோ?
ஈரடி யானே பாரெலா மளந்த
மாலொடு புரையவிஞ் ஞாலத் தவர்தாங்
கண்ணுபொரு ளனைத்து மெண்ணி யெனைத்தெனக்
காட்டி யளந்து நீட்டுங் கருவியோ?
முன்னும் பின்னுந் துன்னுமொழி யனைத்தும்
வீறற வொருதான் வேறல்மீக் கொண்ட
பைந்தமி ழரசியின் செந்தனிக் கோலோ?

எனப்பல புகழினுந் தினைத்தனை யெஞ்சா
மாட்சிசால் குறளின் ஆட்சிப் பொருளெலாம்
அணுவினைப் பகிர்ந்துசிற் றணுக்கண் டதனுள்
எழுதிசைப் பரவைநீர் முழுதும் புகுத்தாங்
கட்டியீ தோர்சிறு குட்டிக் குறளென
அழிவி லறத்தினர் வழியெஞ் சாதென
முன்னா சிரியன் றன்னாள் புகன்ற
சொற்றவ னாமலஃ திற்றை ஞான்றொரு
சிறுமகப் பெற்ற துறுதவத் தாலெனச்
சுருக்கத் துள்ளுஞ் சுருக்கமு மாய்ப்பொருட்
பெருக்கஞ் சிறிது மருக்கா தாகி
உயர்வே வேண்டு மயர்வறு சுருக்கமென்
றோதுங் குறட்கோ ரேதமில் சான்றாய்
ஐதமர் நூலொன்று செய்தனன் மாதோ
மருணீங்கு கல்விக் கருணீக மரபினன்
ஓம்பா வீகைக் காம்பிலி நாடும்
பன்னாசீ ரயனிகர் அன்னநற் கொடியும்
வழுத்தார் நடுக்கு மெழுத்தாணிப் படையும்
காமரு திருவகத் தாமரை மாலையும்
மன்னர்தலை தாழ்த்தஃ தென்னென வினவ
அணுத்தனை விடாதுரை கணக்கறி புலமையும்
ஒருங்குபெற் றுயர்ந்த பெருங்குணக் குன்றனான்
இப்பா ரினிலெவ ரொப்பா ரிவர்க்கென
மருட்பவ நீக்கும் அருட்பிர காச
வள்ளலார் குலத்தினன் நள்ளலார்க் கேறனான்
பொறுமை கல்வி புகழோ ருருக்கொடு
துன்னிய தெனவரு சின்னைய வண்ணல்
தவப்பிர காச நிவப்புறு.
சிவப்பிர காசனும் நவப்புல வோனே!

## Author's Note :

My aim in presenting THIRU-KURAL in this form is to enable young school going children to acquaint themselves with great ease even in their early years, with the lofty ideas contained in the orginal.

I have tried my best to convey in these aphorisms the great truths, contained in the original couplets. But I cannot be so preposterous as to claim that I might have done entire justice to the original.

I shall feel obliged to all wellwishers who may offer suggestions for improvement.

If this booklet kindles even in one youngster the desire to study the original, I shall feel justified in my venture.

SALEM<br>
1924.

C. SIVAPRAKASAN.

## விழைவு

எந்தைஆய் அருளி ஞல்யா னியல்தெரிந் ததற்கும் ஆன்ற
பைந்தமிழ் தழிஇய வாழ்க்கைப் பரிசுபெற் றதற்கும் சீர்சால்
மைந்தர்கட் காக வாக்கும் மரபினுல் எமது செல்வச்
சந்திரன் பெயரா லிந்நூல் தழைகென விழைகின் றேனே!

# திருக்குறள் - நூற்பா

## [ குட்டிக் குறள் ]

★

### பதிகம்

வழிபாடு : உலகெலாம் தந்தைதாய் உளமே மன்னுக.
தந்தைதாய் மனம்போல் தழைகமா நிலமே.
பெற்ருேர் மனம்எனப் பிறங்குக உலகெலாம்.

முதனூல் : திறம்பல உணர்த்தும் திருக்குறள் முதல்நூல்

தொகை : அறம்பொருள் இன்பென முப்பாற் றதுவே.

வகை : அறந்தான்,
பாயிரம் இல்லறம் துறவூழ் என்ப ;
அரசியல் அங்கம் ஒழிபியல் மூன்றும்
பொருட்பால் என்று புகலப் பெறுமே ;
களவுகற்பு இரண்டும் காமப் பாலே.

விரி : அவற்றுள்,
அறத்துள் பட்டன் பாயிரம் நான்கும்
இல்இரு பஃதும் துறவுபன் மூன்றும்
ஊழ்ஒன் றுக முப்பா னெட்டே ;
பொருளில் போந்த அரசிரு பானைந்து
அங்கம் முப்பா னிரண்டுடன் ஒழிபு
பதின்மூன் றுக எழுபஃ தென்ப ;
அதாஅன்று,
இன்பத் திறனையும் இயல்புளி வகுத்துக்
களவேழ் கற்புஈ றொன்பான் அளவுடன்
இருபத்து ஐந்து அதிகார மும்துரீஇப்
பல்லோர் உரைநலம் பயின்று பயின்றினிது
பயன் : ஏவரும் உணர்தற்கு எளிதா மாறுதேர்ந்து
அதிகா ரங்கட் கொருபப் பத்தா
ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்கும்
வழிநூல் : குறட்பயன் அல்லதை குட்டிக் குறள்எனூஉ
நூற்பா இயலில் நுவன்றனென்
ஆசிரியன் : ஏற்பக் ‡ கிளிக்காட் டிறையொளி யானே.
அவைதாம் :

‡ சுகவனம் - சிவப்பிரகாசன்

# நூல்

## அறம் : பாயிரம்

### முதலதிகாரம்—கடவுள்

உலகுக் கெல்லாம் ஒருபொருள் முதலே.
கற்றதன் பயன்நம் கடவுளைத் தொழுதல்.
நெஞ்சமலர் வாற்றொழின் நீடுவாழ் குவரே.
அவன்பதஞ் சாரின் அவப்பிறப் பறுமே.
இருபதம் புகழின் வருவினை ஒழிவ.
செந்நெறி நின்றார் மெய்ந்நிலை நின்றார்.
ஒருவனது அடியார் அருமனங் கவலார்.
பிறவாழி நீந்தற்கு அறவாழி தாள்சேர்.
தலைவனை வணங்காத் தலைதலை யலவே.
இறைவனைச் சேரார் பிறவியுள் சோர்வார்.

### 2 அதி. மழை

வானே யுலகில் தான்நேர் அமுதம்.
உணாத்தந் துணவா உறுவதும் வானே.
வானின் றாயின் யாநிற் கும்மே.
மழையின் றாயின் உழுவார் உழல்வார்.
காப்பதும் அழிப்பதும் கனமழை செயலே.
விசும்பின் துளியால் பசும்புல் தளிரும்.
நெடுமழை இன்றேல் கடலுஞ் சுவறும்.
வானவர் பூசனை வானம்உண் டேல்தான்.
தருமமும் தவமும் வரும்மழை யானே.
மழையா லுலகம் ஒழுக்கமு மதினே.

### 3 அதி. துறவோர்

நூலெலாம் தலைமையில் நுவலுவ துறவே.
துறந்தார் பெருமை இறந்தாரில் அதிகம்.
இருமைக் குயரும் பெருமையர் துறவோர்.
பொறிபுலன் செலுத்தா அறிவன்மேல் நிலைத்தான்.
ஐந்தவித் தவருக்கு இந்திரன் சிறுவன்.

மனிதரிற் பெரியோர் மாண்செயல் புரிவோர்.
ஐம்பூத வுணர்வினன் தன்பால துலகு.
முனிவரர் பெருமை மறைமொழி காட்டும்.
குணமலை வெகுளி கணமும்நில் லாது.
அந்தணர் என்போர் செந்தண்மை யாளர்.

### 4 அதி. அறன்

கதிநிதி அறத்திற் பெரிதெதோ வுயிர்க்கு?
அறந்தரும் ஆக்கம்; பிறதருஉம் நீக்கம்.
ஏன்றள வறஞ்செயல் சான்றவர் கடமை.
மனமா சின்மை யறம்; பிற மாலே:
அழுக்கா றுதிய இழுக்கல தறமே.
நாளையென் னுவறம் வேளையி லுதவும்.
எடுப்பவ ரூர்பவர்க்கு இடையதே தருமம்.
அறப்பய னுற்றிற் பிறப்பறுக் கும்மே.
அறப்பய னின்பம் புறப்பொருள் துன்பம்.
அறிவுளார் விருப்பம் அறன்;பிறிது அவமே.

பாயிரம் முற்றும்.

## இல்லறம்

### 5 அதி. இல்லம்

ஏனைமூ வர்க்கும் இல்லறத் தான்துணை.
துறந்தவர் வறியார் இறந்தார்க்கும் அவனே.
பிதிரிறை புதியோர் இனம்தன்ஓம் பல்தலை.
பழிஅஞ்சிப் பாத்தூண் வழிஎஞ்ச லில்லை.
அன்பற னுளதேல் பண்புடைத் தில்லம்.
அறவழி இல்லம் துறவினுட் பெரிது.
தருமஇல் லாளி அருந்தவ மீளி.
நோற்பித்து நோற்கும் நோன்மைய தில்லம்.
பழிஒரீஇ அறத்திற் பட்டதே வாழ்க்கை.
நன்னெறி வாழ்க்கையன் முன்னிடுந் தெய்வம்.

## 6 அதி. மனைவி

குணநலம் செட்டிமை கொண்டவள் மனைவி.
இழிகுண மனைவியேல் அழிவன மாண்பே.
மனைமாட்சி உளதேல் எனைமாட்சி இலதே?
கற்புறு மனைவியின் மற்றெது பேறே?
நன்மனை மொழியா லின்மழை பொழியும்.
தன்கண வன்சொல் தகைமையள் மனையாள்.
பெண்டிர்தம் காவல் திண்டிறல் அரணே.
கொழுநனைப் பேணில் தொழுகுநர் வானோர்.
நல்லிலாள் இலையேல் இல்லையா னடையே.
மனைநலம் மனைவி; அணிகலன் தனையர்.

## 7 அதி. மக்கள்

அறிவுடை மகாரிற் பிறிதுபே றில்லை.
நன்மகார் எழுமையின் துன்பறுப் பாரே.
அரும்பொருள் தனையர் அவர்பொருள் தமவே.
இளமகார் அளாயகூழ் அமுதினும் இனிது.
சீறடி உடல்மொழி செவியுற லின்பம்.
குழலும் யாழும் மழலைமுன் குறைவ.
தந்தைசெய் நன்றி முந்துறூஉம் வென்றி.
மகார்தமிற் சிறத்தல் மன்பதைக் கினிமை.
சான்றவன் எனத்தாய் ஈன்றதின் மகிழும்.
மகன்தரும் உதவி எவன்கொ லெனும்சொல்.

## 8 அதி. அன்பு

அன்புதாள் படாதால் ஆர்வம்கண் நீரால்.
என்பையும் உதவுவது அன்பினது இயல்பு.
உடலுயிர் அன்பின் தொடர்புஅது பயனே.
அன்பரு ளார்வம் நண்புசெய் யும்மே.
இன்புற்ற வாழ்வும் அன்புற்ற வழியே,

அறச்சார்பு அன்பே மறத்தினும் ஆகும்,
என்பில மான அன்பிலர் தீய்வர்.
அன்பிலா வாழ்வு பாலையில் தளிர்வே.
அகத்தறும் அன்பேற் புறத்துறுப் பெதற்கு?
அன்பஃ துயிர்;பிற என்புதோல் உடலே.

## 9 அதி. விருந்து

இருந்தோம்பும் வாழ்க்கை விருந்தோம்பு தற்கே.
விருந்துஅய லாக மருந்தும்ஆ காதே.
விருந்தோம்பு மில்லம் வருந்துமா றில்லை.
நல்விருந் தில்லிற் செல்விவந் துள்ளாள்.
விருந்தோம்பி னிலனில் வருந்தாத பலனே.
விருந்துகாப் போனை விரும்புமால் வானே.
விருந்தின்நற் பயனதன் வரம்பின்அத் துணையே.
வருவிருந்து இகழ்ந்தோர் அரும்பொரு ளிழந்தார்.
செல்வத்துள் வறுமை விருந்தேலாச் சிறுமை.
நோக்கினே திரியும் பூவரும் விருந்து.

## 10 அதி. இன்சொல்

அன்பளைஇ வஞ்சனை யறுவதே இன்சொல்.
அகமகிழ் வீகையின் முகமலர் வினிது.
அலர்முக மினியநோக் ககச்சொல தறமே.
இன்சொலன் துன்ப இன்மையில் நீங்கும்.
இனியவும் பணிவும் அணிகலன் என்ப.
அறம்மிகு மினியன ஆய்ந்துரை செயினே.
நயன்நன்றி யீனும் பயனீனும் இன்சொல்.
சிறுமைதீ ரின்சொல் மறுமையு மினிது.
இன்சொலின் பங்கண் டென்கொலோ வன்சொல்.
கனிஒரீஇக் காய்கவர்வு இனியபே சாமை.

## 11 அதி. நன்றி

தனிவரு நன்றிக் குலகெலாம் சரியே ?
காலச்சிற் றுதவி ஞாலத்திற் பெரிது.
எதிர்பாரா வுதவிப் பயன்நீரிற் பெரிது.
தினைநன்றி பனையாச் சீரியர் அறிப.
உதவிக்கு அளவிலை தகுதியது அளவே.
உறுபோதின் உதவி அருநேயம் மறவேல்.
விழுமம்நீக் கினரை எழுமையும் மறவேல்.
நன்றென்றும் மறவேல் ; அன்றன்றே மறக்க.
கொன்றன்ன வேனும் நன்றொன்றால் தீரும்.
செய்ந்நன்றி கொன்றார்க் குய்வென்று மின்று.

## 12 அதி. நடுவு

பகுதிஓர்ந்து ஒழுகல் தகுதியாம் என்ப.
செப்பத்தா னாக்கம் எச்சத்தும் உறுதி.
நடுவிலா வாக்கம் விடுதலே ஆக்கம்.
தக்கார்க ளென்கை எச்சத்தா லறிப.
கேடுநன் றல்ல கோடாமை அணியே.
நடுஒரூஉ நினைவில் கெடுவல்என் றறிக.
நடுவாளன் தாழ்வை வடுவாக வையார்.
துலைக்கோலின் நிலையர் கலைப்பால பெரியர்.
சொன்மனங் கோணாத் தன்மையே நடுவு.
பேணியாற் றுவதே வாணிபப் பேறு.

## 13 அதி. அடக்கம்

அடக்கம்வா னுய்க்கும் அடங்காமை நிரயம்.
ஆக்கமா அடக்கம் காத்திடற் பாற்று.
ஆற்றடங் குநரைப் போற்றுமெவ் வுலகும்.
பணிவுளான் தோற்றம் மலையினூஉங் கேற்றம்.
அடக்கமாஞ் செல்வம் சிறப்புச்செல் வர்க்கே.

செம்மைஐந் தடங்கின் எம்மையுங் காக்கும்.
நாஅடங் குவதால் தீயவை பிறவா.
ஒன்றேனும் தீச்சொல் நன்றியாவும் மாய்க்கும்.
தீப்புண்ஆற் றிடலாம் நாவடுமா றாதே.
அகத்தடங்கி னார்பா லறத்தெய்வஞ் சாரும்.

## 14 அதி. ஒழுக்கம்

ஒழுக்கமே விழுப்பம் உயிரினும் பெரிது.
பலவாற்றி னாலுந் துணையாவ தொழுக்கம்.
ஒழுக்கமே குடிமை இழுக்கமாம் இழிமை.
மறப்பினும் கற்பான் இழுக்கின்ஆ கானே.
தீயாரின் ஆக்கம் ஆகாரின் உயர்வே.
உரவாளர் அறிவார் பிறஏதம் படுதல்.
ஒழுக்கத்தா லுயர்வாம் இழுக்கத்தால் பழியே.
நன்றிவித்து ஒழுக்கம் ; குன்றும்மற் றிழுக்கம்.
ஒழுக்கினர் தீய வழுக்கியும் கூறார்.
உலகத்தோ டொழுகார் பலகற்றும் என்னாம்?

## 15 அதி. பிறன் மனை

அறம்பொரு ளுணர்வார் பிறன்மனை நயவார்.
பிறன்கடை காப்போன் அறன்கடைப் பேதை.
தெளிந்தாரில் விழைவோ னிறந்தாரி னுழல்வான்.
தினைப்பிறனில் விழைவார் பனைத்துணையு மழிவர்.
எளிதெனப் பிறனில் விழைவதிற் பழியே.
பழிஅச்சம் பாவம் பகைஅயலாற் படுமே.
பிறன்மனை கருதான் அறன்மனை உறைவான்.
அயல்கருதா ஆண்மை ஆன்றஒழுக் கென்ப.
நலக்குரியார் பிறனில் புலக்கருதா தவரே.
அறப்புறத்தா னெனினும் அயல்கருதா னினியன்.

## 16 அதி. பொறுமை

அகழ்வுறு நிலப்பொறை இகழ்பவர்ப்பொறுத்தல்.
பொறுத்தலின் மறத்தல் சிறப்பரு ளுவது.
அறியார்ப் பொறுத்தல் பெரியார் கடமை.
பொறுமையைப் போற்றின் நிறையஃ தாற்றும்.
பொறுத்தவர் உலகில் புகழ்த்தலை நிலைஇயர்.
ஒருமுறை பொறுத்தார்க்கு இறுப்வரை இன்பம்.
பிறர்பிற செயினும் அறநெறி தவறேல்.
மிகுதிசெய் தாரைத் தகுதியான் வெல்க.
இறந்தார்வாய்க் காயார் துறந்தாரில் தூயர்.
இன்னாவிற் பொறைமை உண்ணாதிற் பெரிது.

## 17 அதி. அழுக்காறு

அழுக்கா றாமை ஒழுக்கா றாமே.
அழுக்கா றின்மை விழுப்பேறு என்ப.
அறத்திரு வேண்டான் பிறர்திருப் பேணான்.
இழுக்காற்று ஏதம் அழுக்கா றீயும்.
அழுக்காறு மறைவில் தனக்கூறு புரியும்.
ஈதல்பொறான் சுற்றம் நோதலுறீஇச் சாகும்.
ஔவியனைச் செய்யாள் தவ்வையைக்காட் டிவிடும்.
திருவொழியத் தீய சேர்க்கும்அழுக் காறே.
ஔவியவான் செல்வம் செவ்வியர்நோய் ஆய்ப.
அழுக்காற்றின் அகலார்; அஃதற்றார் கவலார்.

## 18 அதி. வெஃகல்

பிறர்பொருள் நினைவேல் அறுமவர் கனமே.
நடுநிலை தவறார் படுபயன் கருதார்.
மற்றின்பம் வேண்டிற் சிற்றின்பம் வேண்டேல்.
அறிஞர்பிறர் பொருளை வறிஞரெனக் கருதார்.
ஆய்அறிவென் பயனே தீவெறிய செயினே?

பிறர்பொருள் கருதின் அறவழி கெடுப.
அயலாக்க விழைவின் பயன்ஏக்க விளைவே.
பிறர்பொருள் கருதார் பொருளறன் பெருகும்.
அறனுடைவெஃ காரைத் திருவலியச் சேரும்.
வெஃகல்அழிவு அதனின் அஃகல்புக ழாமே.

## 19 அதி. இகழாமை

அறங்கூறான் எனினும் புறங்கூறா னினியன்.
அறம்பொய்த்தல் தன்னிற் புறம்பொய்த்தல் தீது.
முன்புகழ்வான் சாதல் நன்குநிகழ் வென்ப.
பின்கூறு தலினும் முன்கோறல் இனிது.
அறங்கூறான் தன்மை புறங்கூறப் படுமால்.
பழிகூறு மவனே பழிகார னாமே.
நகச்சேரார் கேளிர் பகக்கூறு வாரே.
தன்னவர் இகழின் என்னைகொல் அயலே.
புறச்சொலாற் பொறுத்தல் அறத்தாறு போலும்.
தன்தவறு அறிவான் என்சொலல் அயலே?

## 20 அதி. பயனில் சொல்

நயனுளார் எள்ளப் பயனில சொல்லேல்.
ஆய்வுரை யலாத நேயரினு மாகா.
பயனிலாச் சொல்லே நயனிலான் என்னும்.
பயனிலா வாக்கே நயன்எலாம் நீக்கும்.
நீரல மொழியில் சீர்நலம் அழியும்.
தக்கசொல் லாதான் மக்களுட் பதடி.
நயனில சொலினும் பயனில பயிலேல்.
தகையுடை நீரார் மிகைபடக் கூறார்.
மருள்தீர்ந்த பெரியார் பொருள்தீர்ந்த கருதார்.
பயனிலது ஒழியப் பயனுள பயில்க.

## 21 அதி. தீவினை

தீவினை யவரே தீவினைக் கபரார்.
தீயசெய் தீய தீயினும் தீய.
ஒன்னார்க்கும் தீமை எண்ணாமை உயர்வு.
தீயவர்க்கும் தீய செய்யிலறம் தேயும்.
205 வறியனெனத் தீய புரிபவனே வறியன்.
நோயடல் வேண்டான் தீவினை தீண்டான்.
எனைப்பகையும் தீரும் வினைப்பகைமை கோறும்.
தீவினை நிழல்போல் சேர்ந்துஅடும் என்ப.
தன்காப்பான் யாதும் துன்பாக்கான் ஆகும்.
210 மறுங்கோடிப் பிழையான் அருங்கேட னாமே.

## 22 அதி. ஒப்புரவு

வானுக் குலகெதிர் வழங்கற் கிலது.
ஊக்கத் துறுபொரு ளுதவிக் கென்ப.
ஒப்புரவின் நன்று வுலகெதினு மின்று.
ஒத்தறிவான் வாழ்வான் செத்தவனும் பிறனே.
215 பேரறிஞன் செல்வம் ஊருணிநீர் போலும்.
ஊர்நடுவண் தருவாம் உலகுவப்பான் திருவே.
பெருந்தகையன் செல்வம் மருந்துமரம் நிகரும்.
உதவும்நிறை யறிஞர் வறுமையினும் ஒல்கார்.
நயனுடையான் இலனா குதலுதவா மையினால்.
220 உதவியாற் கேடேல் உயிரீந்தும் கொள்க

## 23 அதி. ஈகை

இலார்க்கீதல் ஈகை எதிர்நீர பிறவே.
எதுகொளலும் தீதே அதுவரினும் ஈக.
இலன்என்னா தீகை குலனுடையான் செய்கை.
இன்முகங்கா ணளவும் இரத்தலில் இன்னாதே.
225 தவமாற்ற லதினும் பசிமாற்றல் வலிமை.

அழிபசி தீர்த்தல் பொருள்நனி சேர்த்தல்.
பாத்துண்ணு மவனைத் தீப்பிணி யணுகா.
சேர்த்திழக்குங் கண்ணார் ஈத்துவக்க நண்ணார்.
தமியருணல் யாவும் அவியவுணல் ஆமே.
ஈதலிலான் சாதல் இனிதுஅதனாங் கில்லை.

## 24 அதி. புகழ்

ஈதல்புகழ் மருவி வாழ்தலுயிர்க் குறுதி.
இசைப்பவர் இசைகள் ஈபவர் மேல.
நிலையா வுலகில் நிலைப்பது புகழே.
புகழ்பெறப் புரிவோர் புலவரிற் பெரியர்.
நிலையல வுளவா நிறுவுவர் புலவர்.
ஆன்றபுக ழின்றேல் தோன்றாமை நன்று.
புகழ்பெறார் பிறரை இகழ்தலென் மன்னே.
இசையிலா வையம் வசையுளாம் என்ப.
இசையுயிர் பொருந்த நிலம்நல முறாது.
வசைஒழிய வாழ்வார் இசைஒழிய வாழார்.

இல்லறம முற்றும்

# துறவறம்

## 25 அதி. அருள்

செல்வத்துள் செல்வம் அருள்செல்வம் என்ப.
பலதேறி னாலும் துணையாவது அருளே.
அருள்ஆர்ந்தார்க் கில்லை இருளார்ந்த வுலகே.
மன்னுயிர்க் கருள்வான் தன்னுயிர்க்கு அயரான்.
அருளாள்வார்க் கியாண்டும் அல்லலில்லை என்ப.
அருள்நீங்கின் ஏனைப் பொருள்நீங்கு மாமே.
இவ்வுலகில் பொருள்போல் அவ்வுலகுக் கருளே.
பொருளற்றால் பொலிவார் அருளற்றா ரழிவர்.
அருளாதா னறந்தான் தெருளாதான் பொருள்போனும்.
வலியார்முன் தன்போல் எளியாரைக் கொள்க;

## 26 அதி. புலால்

பிறிதூன் உண்பான் அருள்ஆ ளானே.
போற்றார் பொருள்போல் ஆற்றார்க் கருளே.
புலைமனம் என்றும் நலம்நினை யாது.
அருளல கோறல்; பொருளல புலையே.
புலவுணில் உயிரே; உமிழ்கல நரகே.
கொள்வோர் இலரேல் கொல்வார் இலரே.
புண்ணா உணர்வார் உண்ணார் ஊனே.
செயிர்தீர் அறிவார் உயிருண் கருதார்.
ஓருயிர் அவியான் ஆயிர மவியான்.
கொலைபுலை ஒழியின் உலகெலாம் தொழுமே.

## 27 அதி. தவம்

தவத்துரு நோய்ப்பொறை தண்அரு ளுடைமை.
தவந்தவம் உடையார்க் கவம்அஃ திலார்க்கே.
துறந்தவர்க் குதவத் தவம்மறப் பதுகொல்?
ஆக்கலும் தெறலும் நோக்கில் தவம்தரும்.
வேண்டுவ தரலான் ஈண்டுதும் தவமே.
தவஞ்செயின் உயர்வா ரவஞ்செயின் அயர்வார்.
துன்பற நோற்பார் பொன்பெறும் ஒளியர்.
தன்னுயிர் பெறினே மன்னுயிர் போற்றும்.
நோற்றிடும் ஆற்றல் கூற்றையே மாற்றும்.
இலர்பலர்: நோற்பார் சிலர், பலர் நோலார்.

## 28 அதி. இழுக்கம்

வஞ்சக ஒழுக்கை நெஞ்சகம் நகுமே.
அறிவறும் ஒழுக்கில் பெருநிலை எதற்கு?
புலியதள் பசுமேய்வு இழிகுணன் பெருமை.
தவமறை இழுக்கு புதல்மறை சிமிழ்ப்பு.
அற்றார் இழுக்கம் எற்றெற்று என்றடும்.

உள்துறவா வஞ்சர் கெட்டவரோ கொடியர்.
வெளிசேந்துள் கருத்து நலிவாரும் உடைத்து.
அகத்தூய்மை இன்றிப் புறத்தூய்மை நன்றே!
அம்புநேர் யாழ்கோடு ஆய்வினை அறிக.
மழித்தலும் நீட்டலும் பழிப்பொழிக் காவே.

## 29 அதி. களவு

எள்ளாமை வேண்டில் கள்ளாதி நெஞ்சு!
கள்ளலில் பிறிதொன்று உள்ளலே தீது.
ஆவபோல் களவான் மேவிய கெடுமே.
கரவின்ஆம் காதல் தரும்தவா நோதல்.
அறன்அருள் கருதார் பிறர்பொருள் கவர்வார்.
பொருள்கவர் கள்வர் அறநெறி நில்லார்.
களவிரு ளாண்மை உளநலத் தார்க்கில்.
அறிஞருக்கு அறம்போல் கரவவர்க் குறுமே.
கள்ளலே அறிவார் அல்லலால் அழிவார்.
கள்ளரைஊன் தள்ளும்; நல்லரைவான் தள்ளா.

## 30 அதி. வாய்மை

யாதினும் தீமை தீர்உரை வாய்மை.
மெய்ந்நலம் செய்யில் பொய்யும்வாய் மையே.
நெஞ்சறி பொய்ம்மை வஞ்சரில் கோறும்.
உளந்தவறுன் உலகோர் உளந்தவறு துளனே.
மனவாய்மை கூறில் தவம்தானம் வீறும்,
எய்துபல அறமும் இசைவாய்மை தருமே.
பொய்யாமை ஆற்றில் செய்வதேன் அறமே?
புறம்நீரால் தூயது; அகம்வாய்மை யானே.
சான்றவர் விளக்கம் ஆன்றவாய் மையே.
வாய்மையில் தூய யாம்மெய்யாக் காணேம்!

## 31 அதி: வெகுளி

செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான்; பிறிதென் ?
அல்இடத்தும் தீதேல் செல்லிடத்துச் சினமேன்?
மறத்தல்சினம் தீய பிறத்தல்அத னாலே.
நகைஉவகை தீர்க்கும் பகைசினமே யார்க்கும்.
தனைக்காத்தல் வேண்டில் சினம்காத்தல் நன்று.
சேர்ந்தாரைக் கொல்லி சினமினமும் கொல்லி.
சினம்உவந்த வெய்யன் நிலமறைந்த கையன்.
எரிதோய் வின்னலினும் சினவாமை நன்று.
நினைந்தபேறு யாவும் சினந்திலான் மேவும்.
இறந்தாரே முனிநர்; துறந்தாரே முனிவர்.

## 32 அதி. இன்னா

திருப்பேறு பெறினும் பிறர்க்குஊறு புரியேல்.
கறுத்தின்னாச் செயினும் மறுத்தின்னாக் கருதேல்.
வலிதுசெறுத் தார்க்கும் நலிவுசெயில் தாக்கும்.
துன்புசெய்தோர் நாண னன்குசெய்தல் மேன.
தம்நோய்போல் கருதாற் கென்னேயா மறிவே?
தன்நோய் உணர்வான் என்நோய் செயலே ?
எனைத்தென்றுந் தீமை இழைக்காமை தலைமை.
தன்னுயிர்க்கு ஊறேல் மன்னுயிர்க்கு யாதே ?
பிறர்க்கின்னல் நாடில் தனக்குப்பின் கோடி.
நோய்செய்வார் மேல ; நோய்செய்யார் சீலர்.

## 33 அதி. கொலை

அறவினை ஓம்பல்; பிறதரூஉம் நீங்கல்.
பாத்துண்டு போற்றல் மேற்றென்ப நூலோர்.
தனிஅறம் கொலாமை; இனிதுபொய் சொலாமை.
யாதொன்றுங் கொல்லாச் சூழேநல் லாறு.
நிலைதுறவு எதினும் கொலைதுறவு தலை.

கொல்லான் நாள்மேல் செல்லா கூற்று.
தன்னுயிர் நீப்பினும் மன்னுயிர் நீக்கேல்.
கொன்றாகும் ஆக்கம் குன்றேனும் மாய்க்கும்.
கொலைஞர்தாம் உணர்வில் புலையரே ஆவர்.
உயிர்உடல் பிரித்தார் செயிர்உடல் வருத்தர்.

## 34 அதி. நிலையாமை

நில்லா நிலைஎனல் புல்லறி வாண்மை.
கூத்தாட் டவைபோல் ஆக்கமும் ஆம்போம்.
நிலையில கழிமுன் நிலையுள புரிமின்!
நாளெனும் வாள்வாய் ஆளுயிர் அறிக.
விக்குள்நாச் செறுமுன் தக்கசெய் துய்க.
நேற்றிருந் தான்எனும் பேற்றதிவ் வுலகு,
வருபொழுது அறியார் கருதுப பலவே.
குடம்பையுள் புள்போல் உடம்புயிர் நட்பு.
இறத்தலும் பிறப்பும் உறக்கம்நீப்பு அனைய.
ஓடுயிர் நிலைக்க வீடிலை போலும்!

## 35 அதி. துறவு

அவாவின் கேடே தவாஇன்பு என்ப.
வேண்டித் துறப்பின் ஈண்டுவ பலவே.
ஐம்புலன் வேண்டுவ தறுத்தலே துறவு.
இன்மையே நோன்பின் இயல்;பிற மயலே.
உடல்மிகை துறவிக்கு எனில்எது தொடர்பே?
யான்என தறுப்போன் வானின்மே லிருப்பன்.
பற்றறா தவரைப் பற்றிடுந் துன்பம்.
தலைப்பட்டார் துறவோர் வலைப்பட்டார் பிறரே.
பிறப்பறுக்குந் துறவு பிறப்புறுக்கும் பிறிது.
பற்றறப் பற்றுக பற்றிலான் பற்றே.

## 36 அதி. மெய்யுணர்வு

பொருளல கருதும் மயலது பிறப்பு.
இருள்நீங்கும் இன்பம் மருள்நீங்கி யார்க்கே.
ஐயந்தீர் தெளிவோர்க்கு உய்யும்வான் அணிது.
மெய்யுணர் வின்றி ஐயறிவு உறின்என்?
355 எப்பொருள் எதினும் மெய்க்கொள லறிவு.
கற்றுண்மை வந்தார் மற்றீண்டு வாரார்.
ஓர்த்துள்ள துணர்வார் பேர்த்துள்ளார் பிறவி.
பேதைமை நீக்கித் தேவுணர்வு அறிவு.
செம்பொருள் உணரில் துன்பமே அணுகா.
360 அவாசினம் மயல்இவை அறஅறும் நோயே.

## 37 அதி. அவா

அவாஎனும் வித்தே தவாப்பிறப் பீனும்.
பிறவாமை வேண்டில் பிறவேண்டார் அறிஞர்.
வேண்டாமை அன்ன விழுச்செல்வ மில்லை.
அவாஇன்மை தூய்மை அஃதீனும் வாய்மை.
365 அவாஅற்றார் அற்றார் அற்றாகார் பிறரே.
வஞ்சக அவாவை அஞ்சுவ தறனே.
அவாவினை அறுப்பில் தவாநலம் அதுவே.
அவாதருந் துன்பம் அஃதறல் இன்பம்.
இடையறா இன்பம் அவாத்துன்பம் அறினே.
370 ஆரா இயல்நீர் அறஉறும் நிலைமை.

## 38 அதி. ஊழ்

ஆம்வினை முயல்தல்; போம்வினை அயர்தல்.
நல்லூழ் அறிவாம் ; அல்லூழ் இழிவே .
பலநூல் பயிலினும் இயல்பே மிகுமால்.
திருவும் தெளிவென இருவகைத்து உலகு.
375 ஊழால் தீயன நல்லவும் ஆகும்.

வருவன போகா வராதன அற்றே.
தொகுத்துள பேர்க்கும் வகுத்துள அளவே.
வறுமைஇன் பாயின் துறவுகை கூடும்.
ஆங்கால் மகிழ்வார் ; போங்கால் அழல்என் ?
சூழினும் முந்துறும் ஊழ்வலி பெரிது.

அறம் முற்றிற்று.

## பொருள்

### 39 அதி. அரசன்

படைகுடிகூ ழமைச்சு நட்பரண்வேந் துறுப்பு.
ஈகை வலியறி வூக்கத்தது அரசு.
விரைவொடு கல்வி துணிவுளா னரசன்.
அறம்மறம் மானம் அருததே அரசு.
ஆக்கிஈட் டிஓம்பி வகுப்பதாம் அரசு.
எளிதுகாண்பு இன்சொலற்கு இந்நிலம் மிகுமே.
இன்சொலீத் தளிப்பார்க்கு இனியதெவ் வுலகும்.
முறையினால் காக்கும் அரசனே இறைவன்.
செவிகைப்பப் பொறுப்பான் கவிகைக்கீ ழுலகு.
ஈவருள் முறையோம் பிறைஒளி பெறுமே.

### 40 அதி. கல்வி

கசடறக் கற்றுத் தகநிற்ப தழகு.
எண்எழுத் துயிருக் கிருவிழி என்ப.
கண்கற்ற வர்க்கே; புண்மற்ற வர்க்கு.
கூடிப் பிரியாக் கோளது புலமை.
இல்லார்போல் ஏங்கிக் கல்லாரே கடையர்.
ஊற்றெனக் கற்றனைத்து ஊறுவது அறிவு.
யாதுமூர் நாடெனில் ஓதுமூர் என்னே ?
ஒருமையின் கல்வி எழுமையும் உதவும்.
உலகுறும் இன்பம் புலவர்தம் இன்பம்.
கேடறு செல்வம் மாடுறு கல்வி.

## 41 அதி. கல்லாமை

நிரம்பறிவு இல்லான் அரங்கேறல் இழிவு.
கலைஇலான் சொல்கை நகைதருஉஞ் செய்கை.
கற்றோர்முன் சொல்லா மற்றோனே நல்லன்.
கல்லான் அறிவைக் கொள்ளார் அறிஞர்.
405 கல்லான் தகைமை சொல்லால் அறிப.
உளர்அலால் பயவாக் களரனுர் கல்லார்.
கலையிலான் எழிலும் நலனும்பா வையதே.
மற்றோர் திருவிற் கற்றோர் வறுமை.
கீழ்மேல் கற்பின் மேல்கீழ் ஆகும்.
410 கற்றோன் விளங்கும்; கல்லான் விலங்கே.

## 42 அதி: கேள்வி

புவிச்செல்வம் எதினும் செவிச்செல்வம் பெரிது.
செவிக்குண வின்றேல் சிறிதுணல் ஆகும்.
அருஞ்செவி உணர்வார் அமரரில் அமர்வார்.
கல்லாரும் கேட்பின் வல்லோரே ஆவர்.
415 ஏற்றத்தார் வாய்ச்சொல் ஊற்றுக்கோ லற்று.
எனைத்தானுங் கேட்கின் அனைத்தானும் பெருமை.
மேதகை யுணர்வார் பேதைமை புணரார்.
கேட்டிலாச் செவியேல் தோட்கினும் கேளா.
நுணங்குகேள் விஇலார் வணங்குவா யிலரே.
420 செவியுணர் வில்லார் அவியின்வா ழினுமென் ?

## 43 அதி. அறிவு

ஆக்கவும் அழிக்கப் படாததும் அறிவு.
நன்றின்பா லுய்க்கும் குன்றாத அறிவு.
யார்வாய்எப் பொருளும் தேர்ந்தோர்வ தறிவு.
அரியசெலச் சொல்லி அன்னகொளல் அறிவு.
425 அலர்கூம்பல் இலாதது உலகோம்பும் அறிவு.

உலகத்து முதன்மைத் தலைநிற்பது அறிவு.
ஆவன முன்னு அறியும்அஃ தறிவு.
அஞ்சாப் பேதமை அஞ்சுவ தறிவு.
அதிர்நோய் வராமை எதிர்காப்ப தறிவு.
இலதெனைதையும் உலகில் உளதாக்கும் அறிவே.

## 44 அதி. குற்றம்

செருக்கொடு சிறுமை சினமறல் பெருமை.
இவறல்மா னங்கெடல் இருமுவப் பும்மிகை.
தினைநவை பனையாச் சீரியன் அஞ்சும்.
அற்றந் தரும்பகை குற்றமே; அறிக!
மிகைஅஞ்சார் எரிமுன் மிகுபஞ்சே ஆவர்.
தற்குற்றம் காக்கின் எக்குற்றம் தாக்கும்?
செயற்பால செய்யான் உயற்பால கெடுமே.
பற்றுள்ளத் திவறல் எற்றுள்ளும் தவறு.
வியவற்க யாதும்; நயவற்க தீது.
பிறர்அறியாக் காத லவைபெறுவான் மேதை.

## 45 அதி. அறிஞர்

அறன்அறி மூத்த அறிவினர்ச் சேர்க.
பெரியோர் பழக்கம் உறுநோய் அழிக்கும்.
அரிதரிது அறிஞர் தமரெனப் பெறுதல்.
ஒருவனது ஆண்மை அறிஞர்தம் கேண்மை.
சூழ்வாரின் உலகம் சூழ்வாரைச் சூழ்க.
தக்கார் இனனைச் செற்றார் செயலென்?
இடிப்பவர்க் காப்பிற் கெடுப்பவர் எவரே?
நல்லுரை கொள்ளார்க்கு அல்லலன்று; அழிவே.
துணைஇல்லா அரசு முதல்இல்லா தியமே.
தகைஒருவர்ப் பிரிவு பகைபத்தில் தீது.

## 46 அதி. சிற்றினம்

மேதகை ஒழிவன பேதைமை தழுவும்.
நிலத்தியல் நீர்போன் றினத்திய லறிவு.
மனத்தால் உணர்வாம் இனத்தால் உயர்வே.
மனத்ததாக் காட்டி இனத்ததாம் அறிவு.
455 மனம்வினைத் தூய்மை இனந்தரு மாமே.
மனவினைச் சீரார் நனிவினைப் பேறார்.
மனஇன நலன்கள் பொருள்புகழ் தருவ.
மனநலம் மிகினும் இனநலம் பெருமை.
இனமன நன்னிலை இனம்வலி மைதரும்.
460 நல்இனம் துணையாம் அல்லதுஆ காதே.

## 47 அதி. ஆய்வினை

ஆவது அழிவொடுஊ தியத்தெரிவு ஆய்வினை.
சீரினத் தேர்வினை யார்க்கரி தில்லை.
ஊதியம் கருதி முதல்கெடார் அறிஞர்.
இளிவென அடலார் தெளிவில தொடரார்.
465 வகையறச் சூழான் பகைவரால் சூழ்வான்.
தகாசெயி னும்தக செயாமையா னும்கெடும்.
பின்நினை வெனமுன் நண்ணுதல் தீது.
ஆற்றல்சா லாவினை போற்றினும் கெடுமே.
ஆய்விலா நல்வினை யாயினுந் தவறு.
470 எள்ளுவ தள்ளில் கொள்ளுவ துலகு.

## 48 அதி. வினைவலி

வினைபகை துணைதன் வலிதெரீஇத் துணிக.
இயலுவ தெரிந்ததின் முயலுநர்க்கு அரிதுஇல்.
உடைவலி அறியார் வினையிடை முரிப.
அமைவள வறியான் வியந்தவன் கெடுவான்.
475 தூவியும் மிகினே போயிறும் சகடும்.

எல்லைமீச் செல்வோர் ஒல்லையில் கெடுவர்.
அளவறிந் தீதல் பொருள்செறி வாதல்.
செலவுசு ருங்கில் வரவில் குறைவென்?
அளவறி யாச்செலவு உளதுபோ லழியும்.
உளவரை யறியான் ஒப்புர வழிக்கும்.

## 49 அதி. காலம்

கூகைவெல் காக்கைபோல் ஆய்ககா லச்செயல்.
பருவநன் முயறு திருப்பிணை கயிறு.
கருவியும் காலச் செறிவினைக்கு அரிதுஇல்.
காலத் திடவினை ஞாலமும் நல்கும்.
ஞாலநோக் குடையார் காலநோக்கு அடைவர்.
தளரான் ஒடுக்கம் தகர்பேர்வு அடுக்கும்.
அயராமல் காலச் செயலார்தல் வலிமை.
பகைப்பொறை அரசர்க் கிறும்வரை கூட்டும்.
அரியபோழ் துறினே புரிவன விரைக.
கொக்கெனக் கூம்பித் தக்கசெய்து உய்க!

## 50 அதி. இடம்

இடங்கண் டல்லது தொடங்கிடேல்; இகழேல்.
முரண்வலி யவர்க்கும் அரண்வலி பலவே.
போற்றாரை இடமறி ஆற்றாரும் அடுவர்.
இடம்வலி யுடையார்க் கடல்படை உடையும்.
நீருள் முதலையர் பாருள் நலிவர்.
ஓடமுந் தேரும் மாறிஓ டாவே.
இடம் எண்ணிச் சேர்வார் திடம்நண்ணில் உயர்வே.
சிற்றிடைப் பெரும்படை சேரலோ இழிவு.
சிறைசீரில் லேனுஞ் சேரிடம்வெல் வரிது.
படைமுரி கரியையும் களரிடை நரியடும்.

## 51 அதி. தெளிதல்

அறம்பொருள் இன்பம் அச்சத்தால் தெளிக.
பிறப்புளன் மாசிலன் வடுப்பரிவன் தேர்க.
கற்றடங் கினார்க்கும் குற்றமுண்டு ஆயின்.
குணம்குற்றம் நாடி மிகைகண்டு கொள்க.
505 பெருமையும் சிறுமையும் கருமமே தருமால்.
அற்றவர் நாணார் பற்றிலர்த் தேறேல்.
அறியாரைத் தேர்தல் பரிவேயன்று ; ஏதம்.
தேரான் தெளியில் தீரா இடும்பை.
தேராது தேறேல் ; தேறுக தேர்ந்தே.
510 தேரான் தெளிவும் தெளிந்தான்ஐ யமும்நேர்.

## 52 அதி. வினையாட்சி

நலம்தீமை நாடிப் பலம்தேடி ஆள்க.
வருவாய் பெருக்கிப் புரிபவன் ஆள்க.
ஆசையிலன் தேற்றன் அன்பறிவன் தேர்க.
எனைத்தானும் நல்லார் வினைப்பொல்லா ராப.
515 அறிந்தாற்றின் அல்லால் தெரிந்தானென் றேவேல்.
செய்பவன் வினையொடு செவ்விதேர்ந் தாள்க.
இஃதிவன் இதனால் இயல்வதோர்ந் தாள்க.
வினைக்குரிமை நாடி அதற்குரியன் ஆள்க.
வினையாளன் கேண்மை நினையானேல் கேடே.
520 நாடோறும் நாடும் கோடானை நாடு.

## 53 அதி. சுற்றம்

பற்றறினும் பழமை சுற்றத்தார்க் குளது.
அன்புள்ள சுற்றம் நன்றெல்லாம நல்கும்.
அளவளா வாழ்க்கை கரையிலா நீர்த்து.
பெற்றபொருள் பயனும் சுற்றமுறல் என்ப.
525 கொடுத்தலும் இன்சொலும் அடுக்குவ சுற்றம்.

வண்மையன் வெகுளான் மருங்குளார் பலரே.
காக்கைபோல் கரவார்க்கு ஆக்கம்மேல் வளரும்.
பொதுநோக்கான் வரிசைக் கெதிர்பார்ப்பார் பலரே.
பிரிந்தவர் சேரச் சிறந்தகா ரணம்இல்.
இடைஒரூஉம் ஏதுதேர்ந் தியைபவர்க் கொள்க.

## 54 அதி. மறவி

மிகுவெகு ளியினும் மறவிஓஒ! தீது.
வறுமைமுன் அறிவென மறவிமுன் புகழ்சாம்.
பொச்சாப்பி இழிவது எச்சார்பும் துணிபு.
அச்சநேர் மறவி அரண்நலம் அழிக்கும்.
முன்னுறக் காவான் பின்னூ றிரங்கும்.
இழுக்காமை என்றும் வழுக்காமை நன்று.
மறவாத மனத்தார்க்கு அரிதாவது எதுவே?
இனநலம் மறவார்க் குளபிறர்க் கிலையே.
இகழ்ந்தழிந் தவரை மறந்தபோது ஓர்க.
நினைவரூர் கருதுவ எளிதிலே பெறுவர்.

## 55 அதி. செங்கோல்

ஓர்தலும் நடுவும் தேர்தலும் இறைமுறை.
வான்நாடும் உலகம் கோல்நாடும் குடியே.
மறையறம் ஆதற்கு இறைமுறை ஆதி.
குடிதழூஉம் மன்னன் அடிதழூஉம் உலகு.
விளையுளாம் பெயலும் இயல்புளான் நாட்ட.
கோல்கோடா னாயின் வேல்வேண்டா வென்றி.
இறைகாக்கும் வையம் முறைகாக்கும் அவனே.
ஓர்ந்து முறைசெயான் தாழ்ந்து நிலைகெடும்.
குடிதழீஇ ஓம்பி நவைஒரூஅல் அரசு.
களைகட்டுப் பைங்கூழ் காப்பதாம் செங்கோல்.

## 56 அதி. கொடுங்கோல்

கொலைவல்ல கொடியன் அலைத்தல்ல புரிவோன்.
இடுகஎன்ற வேலான் கெடுகின்ற கோலான்.
நாடோறும் நாடான் நாடுகே டாமே.
மேல்விளைவ எண்ணான் சூழ்குடியும் நண்ணான்.
ஆற்றார் கண்ணீர் கூற்றாம் கோற்கே.
மன்னும் செங்கோல்; மன்னா வெங்கோல்.
வான்துளியின் உலகாம்; கோன்அளியால் உயிரே.
கொடியன்நாட் டுரிமை மிடியினில் கொடிது.
முறைசெய்யான்நாட்டில் உறைபெய்யா வானம்.
கோல்காவான் நாட்டில் ஆநூலும் பயவா.

## 57 அதி. வெருவந்த

தக்காங்கு நாடி ஒத்தொறுக்க வேந்து.
கடிதோச்சி மெல்ல எறிபவனே நெடியன்.
வெருவந்த வெங்கோல் ஒருவந்தம் கெடுமே.
இறைகொடியன் எனும்சொல் உறைகடுக்கக் கெடுக்கும்.
காண்பரியன் கடுஞ்சொல் லன்செல்வம் பேய்த்து.
கடுஞ்சொலனகண் ணோடான் நெடுஞ்செல்வம் கெடுமே.
கொடுஞ்சொல்மிகு தண்டம் அடுமுரண்தேய்க் கும்அரம்.
இனம்எண்ணான் சீரில் திருநீங்கும் என்ப.
தற்காப்புச் செய்யான் உற்றநாள் கெடுவன்.
கல்லாரைச் சேர்க்கும் கடுங்கோற்கேன் உலகம்?

## 58 அதி. கண்ணோட்டம்

கண்ணோட்ட அழகால் உண்டால்இவ் வுலகே.
உலகியல்கண் ணோட்டம் இலர்நிலக்குப் பொறையே.
பண்நாடாப் பாட்டே; கண்ணோடாக் கண்ணே?
கண்ணோடாக் கண்கள் உண்டாயிற் பயன்என்?
கண்ணோட்டம் அணியாம் புண்நாட்டம் பிறவே.

கண்ணோடா இழிஞர் மண்மரப்பா வையனார்.
கண்ணோடார் குருடர் கண்கண்ணோ டுபவே.
கண்ணோடி முறைசெய் வண்ணற்கிவ் வுலகு.
ஒறுத்தாற்று வார்க்கும் பொறுத்தாற்றல் தலைமை.
பெயும்நஞ்சுண் டமைவர் நயநாக ரிகரே.

## 59 அதி. ஒற்றாடல்

உரைஒற்றும் நூலும் இறைகண்கள் என்ப.
உலகநிகழ் வென்றும் உடன்அறிதல் அரசு.
ஒற்றொற்று பயனால் கொற்றம்எளி தன்று.
வினையாளர் உறவோர் பகைஆய்வ தொற்று.
நல்உருவன் அஞ்சான் உள்ளவுகான் ஒற்றன்.
இறந்தாராய்ந் தெங்கும் தெறல்அஞ்சா தொற்று
மறந்தவை கேட்டறி உறுதிய தொற்று.
ஒற்றொற்றிப் பொருளும் ஒற்றொற்றிக் கொள்க.
தொக்கனமுன் றொக்க ; ஒற்றுமறைத் தாள்க.
சிறப்பறியச் செய்யில் புறப்படுக்கும் ஒற்றே.

## 60 அதி. ஊக்கம்

ஊக்கமே உடைமை; உடைமையோ பிறவே?
நிலைபொருள் ஊக்கம் ; நிலையில தாக்கம்.
ஆக்கம்நீத் தலையார் ஊக்கமே லுடையார்.
அசைவிலார்க் காக்கம் அதர்வினாய்ச் சேரும்.
மலர்நீரின் நீட்டம்; உயர்வுஊக்க அளவே.
உள்ளுக உயர்வே; தள்ளாமை நீர்த்து.
ஊக்கமுளார் சிதைவுக்கு ஒல்கார்கள் என்ப.
உள்ளமிலார்க் கில்லை வள்ளியராம் செருக்கு.
பரியகூர்ங் கோட்டுக் கரியும்ம்பு லிவெரூஉம்.
உரமொருவர்க் கூக்கம் இலர்வேறு மரமே.

## 61 அதி. மடி

குடிநந்தா விளக்கம் மடிமாசால் கெடுமே.
குடிகாக்க விழைவார் மடிநீக்கி ஒழுக!
மடிகொண்ட பேதை குடிமுந்து மடியும்.
மடிதீர்ந்து மாணார் குடிவீழ்ந்து கெடுவர்.
605 மடிநெடுநீர் மறவி துயில்கெடுநீர்க் கலன்கள்.
உலகமுழு துறினும் நலன்அரியர் மடியர்.
மடித்துள்ளம் நாட்டார் இடித்தெள்ளல் கேட்பர்
குடியுடையான் மடிமை பகைக்கடியன் ஆக்கும்.
குடிஏற்ற குற்றம் மடிமாற்றக் கெடுமே.
610 மடியிலான் அடிக்கீழ் உலகெலாம் படுக்கும்.

## 62 அதி. ஆள்வினை

அரிதெனச்சோம்பாமை பெருமைதரும்தாண்மை.
வினைக்குறைதீர் வுலகில் வினைகெடவேண் டாவே.
தாளாண்மை மேற்றே வேளாண்மை உலகு.
தாளிலான் வண்மை பேடிவாள் தன்மை.
615 வினைவிழைவான் கேளிர் இனைவுகெடுத் தாள்வான்.
முயற்சிதரும் திருவே; அயர்ச்சிதரும் பிறிதே.
மடிமடியள் முகடி; மலரவள்தா ளவளே.
விதியின்மை அன்றால்; வினைஇன்மை பழியே.
தெய்வத்தில் சால மெய்யுழைப்பு நல்கும்.
620 தாழ்வற முயல்வார் ஊழையும் வெல்வார்.

## 63 அதி. இடுக்கண்

இடுக்கண்வரில் நகுக, அடுத்தூரும் ஆறே!
வெள்ளமும் அடலான் உள்ளலால் கெடுமே.
இடுக்கட் கிடுக்கண் படுப்பன் படானே.
பகடனான் முயல்வில் படும்இடும் பைகளே.
625 அடுக்கிவரும் துன்பும் அறிவினர்க்கின் றென்ப.

அற்றேம்என் றலையார் பெற்றநாள் இவரூர்.
இடும்பைக் குடம்பை இலக்கென்பான் மேலோன்.
துன்பியல்பு என்பான் துன்பிலா தவனே.
இன்பம் விரும்பான் துன்புறா தவனே.
இன்னாமை எதிர்வின் ஒன்னார்கை விதிர்வர்.

அரசியல் முற்றும்.

## அங்கம்

## 64 அதி. அமைச்சு

கருவிகா லஞ்செயல் அரும்வினையது அமைச்சு.
வீரங்காப் பறிதல் ஆள்வினையன் அமைச்சன்.
பிரித்தலும் பேணிப் பொருத்தலும் அமைச்சு.
தெரிதலும் செயலும் சொலவல்லன் அமைச்சன்.
அறத்தான் றமைந்த திறச்சொலன் அமைச்சன்.
மதிநுட்ப நூலார்க் கெதிர்நிற்ப யாவே?
பலசெயற்கை அறிந்தும் உலகியற்கை புரிக.
அறிகொல் அறியாற்கும் உறுதிசொல்க உழையன்.
பழுதுநினை துணையின் எதிர்பலதெவ் இனிய.
முறைசூழ்ந்து முடியார் திறப்பாடில் லவரே.

## 65 அதி. நா நலம்

நாநலத்துள் நல்ல யாநலத்தும் இல்லை.
ஆக்கம்கேடு அதனால் காத்தாள்க சொல்லை!
கேட்டார்கே ளாரும் வேட்பமொழி வதுசொல்.
அறம்பொருள் அதனால் திறம்தெரீஇச் சொல்க.
பிறிதொருசொல் வெல்லற்கு இலதாகச் சொல்க.
செலச்சொல்லிப் பிறர்சொல் பயன்கொள்க வல்லான்,
சொலல்வலன்சோர் விலன்அஞ் சானைவெல் வரிது.
நிரந்தினிது சொல்லின் விரைந்துலகு கொள்ளும்.
பலசொல்ல விழைவார் சிலநல்ல தேற்றார்.
கற்றறிந் துணரச் சொற்றிலார்ப் பயன்என்?

## 66 அதி. தூவினை

துணைநலம் செல்வம் எலாம்தூ வினைதரும்.
புகழ்நன்றி பயவா வினைஎன்றும் நயவேல்.
ஆவார் ஒளியழி வினைஓ வுவரே.
துன்புறினும் அறிஞர் புன்மைவினை புரியார்.
655 எற்றெற்றென் றிரங்கில் பின்காக்க வினையே.
தாய்ப்பசி காணினும் சால்புஅல புரியேல்.
பழிச்செல்வ மலைவில் கழிசெல்லல் தலைய.
தள்ளின கொள்வான் வெல்லினும் பீழை.
அழக்கொண்ட அழப்போம்; இழப்பினுநல் லனவாம்!
660 சலநீர பசுமண் கலநீர் இரீஇயல்.

## 67 அதி. வினைத்திட்பம்

வினைத்திட்பம் ஒருவன் மனத்திட்பம் என்ப.
ஊறொரால்; உற்றால் ஒல்காமை ஆய்கோள்.
பின்காட்ட முடிபே; முன்காட்டின் ஏதம்.
சொலல்எளிது யார்க்கும்; செயலிலவை அரிய!
665 நுனித்தெண்ணும் வினைதான் எனைத்துள்ளும் திட்பம்.
திண்இயல் வினைஞன் எண்ணியாங் கெய்தும்.
உருள்தேர்க்கச் சாணி உருக்கண்டெள் ளேல்மின்!
கலங்காத வினைக்கண் துளங்காது விரைக!
துன்புறினுஞ் செய்க துணிந்தினிய வினையே.
670 வினைத்திட்பம் ஒல்லான் எனைத்திட்பம் இல்லான்.

## 68 அதி. வினைசெயல்

சூழ்ச்சியுறல் துணிவாம்; தாழ்ச்சிஅதில் தீதே.
தூங்கலில் தூங்குக; தூங்காத விரைக!
இயலுமேல் வினைநன்று; அயல்நோக்கிச் செய்க.
வினைபகையின் எச்சம் நினையில்தீ யில்தெறூஉம்.
675 பொருள்கருவி காலம் வினைஇடந்தேர்ந் துறுக.

முடிவிடையூ றெய்தும் பயன்தூக்கிச் செய்க.
செய்வினைஞன் முறைமை அவ்வினையுள் அறிவாம்.
வினைவினையால் ஆக்கல் நனைகவுண்மா யாத்தல்.
நற்செயலின் விரைக , ஒட்டார்ஒட் டிடவே.
680 குறைபெறுவார் கொள்க பெரியார்ப்ப ணிந்தே!

## 69 அதி. தூது

அன்புஆன்ற குடிவேந்து அவாப்பண்பன் தூதன்.
அன்புஅறிவுஆய் வுரைமூன் றன்திறத்த தூது.
நூலாரில் வலியன் வேலார்முன் பகர்வோன்.
அறிவுஉருவன் கல்விச் செறிவன்வினைச் செல்க.
685 தொகத்தூச்சொல் நன்றி நகப்பயக்க தூது.
கலைஞன்அஞ்சான் செல்சொல் காலத்தன் தூதன்.
கடன்காலம் கருதி இடம்தேர்க உரைஞன்.
தூய்மைதுணை துணிவின் வாய்மைதூ தியல்பு.
விடுமாற்றம் சொல்வான் வடுமாற்றம்வெல்வான்.
690 இறும்வரைஎஞ் சாது உறுசொலன் தூதன்.

## 70 அதி. மன்னர்ச் சார்பு

அகலாதண் டாதே இகல்வேந்தர்ச் சேர்க!
மன்விழைவ விழையான் மன்உவப்ப வாழ்வான்.
வருமரிய காக்க; வரின்தேற்றல் அரிது.
செவிச்சொல்சிறுநகையும் அவித்தொழுக திருமுன்
695 ஏதும்ஒரேல் தொடரேல்சொலின்கேட்க மறையே
குறிப்பறித்து காலம் கருதிவேட் பச்செயல்.
வேட்பச்சொல் வினையில கேட்பினும் மொழியேல்.
இளையர்இன்னர் என்றது ஒளியுடனே ஒழுக.
கொண்டேம்என் றெண்ணிக் கொள்ளாத செய்யேல்.
700 பழையம்என வழுவும் கெழுதகைமை அழியும்.

## 71 அதி. குறிப்பறிதல்

கூறுமுன் நோக்கிக் குறிப்பறிதல் அணியே.
ஐயப்பா டின்றி அகமுணர்வான் தெய்வம்.
குறிப்பறிந்து கொள்வார்க் குறுப்பீந்துங் கொள்க.
குறிப்பறிவார்க் கேனை யுறுப்பனையர் வேறு.
குறிப்பறியாக் கண்கள் உறுப்பெனில்ஆம் பயனென ?
பளிங்கடுத்த ஆங்கே முகம்அகத்த காட்டும்.
உவப்பும் காய்வும் முகத்தால் தெளிவு.
அகம்நோக்கி உணர்வான் முகநோக்க அமையும்.
பகைகேண்மை கூறும் கண்வகைஓர் வார்க்கே.
நுண்அறிவார் அளவை கண்அல்லது இல்லை.

## 72 அதி, அவையறிதல்

அவைதெரிந்து சொல்க தொகைஅறிந்த தூயன்.
இடைஅறிந் துணர்ந்தே நடைதெரிந்தான் சொல்க.
அவைஓரார் தேரார் சொல்லவல்லார் அல்லர்.
ஒளியர்முன் ஒளியர்; வெளியர்க்குஅங்கு ஆக !
நன்றென்ப முதுவர் முந்துசொலாச் செறிவு.
தக்கார்முன் சொல்சோர்வு அற்றமாறு இழுக்கு.
சொல்அறிவா ரிடைமெய்க் கல்விவிளங் கிடுமே.
வளர்பாத்தி நீர்பெய்வு உணர்வார்முன் கூறல்.
நல்லவையர் மறந்தும் புல்லவையுள் சொல்லேல்.
அங்கணத்துள் உக்க அமுதாக்கேல் சொல்லை !

## 73 அதி. அவையஞ்சாமை

அவை அறிந்து வல்ல வாய்சோரார் சொல்க.
கற்றார்முன் கற்ற செலச்சொல்க கற்றோர்.
பகைஅஞ்சார் பலரால் ; அவைஅஞ்சார் சிலரே.
கற்றார்முன் தம்போல் மிக்கார்பாற் கொள்க.
ஆறளவுங் கற்க அவைஅஞ்சாப் பொருட்டே.

ஒல்லார்க்கு வாள்ஏன் சொல்லார்க்கேன் நூலே?
அவைக்கஞ்சு நூலான் பகைக்கஞ்சி, வாள்ஏன்?
பலநல்ல கற்றும் அவைசொல்லார்க் கில்லை.
கல்லாரில் பொல்லார் கற்றும்நல்ல சொல்லார்.
களன்அஞ்சிச் சொல்லார் உளரெனினும் இலரே.

அங்கம் முற்றிற்று.

## ஒழிபு

### 74 அதி. நாடு

நல்விளையுள் அறவோர் செல்வர்தொகல் நாடு.
கேடின்றி விழையும் பொருள்விளைவ நாடு.
பொறைதாங்கி இறைவற்கு இறைநேர்வ நாடு.
உறுபசிநீள் நோய்ஆம் பகைஇலதே நாடு.
பல்குழூஉட் பகையும் கொள்குறும்பில் லதுதேஎம்,
கேடறியா கெடினுங் கெடாவளத்ததலைத்தேஎம்.
இருபுனல்வாய் மலைநீர் வல்அரண்நாட் டுறுப்பு.
திருவிளைவுஇன் புஏமம் உறுநாட்டுஐந்து அணியே!
நாடாவ ளத்தன நாடு;பிற அன்று.
ஆங்கமைந்த நாடும் வேந்தமைவின றெனில்வேம்.

### 75 அதி. அரண்

போற்றுநர்ப் பொருள்மற் றுற்றுவார்க் கரணே.
மணிநீரு மலைமண் நிழல்செறிகாட் டதுஅரண்.
உயர்வுஅகலந் திண்மை அருமைஅமை வரணே.
பேரிடத்த சிறுகாப் பாற்பகைகாப் பதுஅரண்.
கொளற்கரிய கொள்கூழ் நிலைக்கெளிய தரணே.
எப்பொருளு முடைத்தா இடத்தாளீ வதரண்.
முற்றிஎறிந்து அறைந்தும் பற்றஅரி தரணே.
சூழ்வலிய ரேனுஞ் சூழ்ந்து வெல்வதுஅரணே.
முனைமுகத்துப் பகைசாய் வினைவெல்வ தரணும்.
எனைமாட்சித் தேனும் வினைமாட்சித்து அரணே.

## 76 அதி. பொருள்செயல்

பொருளலார்ப் பொருள்செய் பொருளலால் பொருளில்.
இல்லாரை இகழ்ப ; செல்வரேல் சிறப்பே !
பொருள்நந்தா விளக்கம் பகைநீக்கும் எங்கும்.
அறமின்ப மீனும் தீதில்திறப் பொருளே.
755 அறன்அன்பின் வாராப் பொருள்புரள விடுக !
உறுவவுல்கு தெறலின் பொருளரசுக் கென்ப.
அன்பீனும் அருள்சேய் பொருள்செவிலி யாளும்.
கைத்துண்டேல் கரிப்போர் மலைஇரீஇக் காண்பாம்,
செய்கபொருள் பகைதீர் எஃகதில்கூ ரியதில்.
760 பொருள்காழ்ப்ப இயற்றின் இருபேறும் ஒருங்கு !

## 77 அதி. படைமாட்சி

உறுப்பமைந்தூ றஞ்சா வெல்படையே செல்வம்.
உலைவிலூ றஞ்சாத் தொலைவிலுந்தொல்படையே
எலியுவரி ஒலித்தென்? நாகமுயிர்ப் பச்சாம் !
அழிவறைபோக் கின்றி வழியவன்கண் படைகள்.
665 கூற்றுறினும் எதிர்க்கும் ஆற்றலதே படையாம்,
படைக்கேமம் மறம்மா னம்செலவு தேற்றம்.
போர்தாங்கும் தன்மைத் தார்தாங்க தானை.
அடலாற்ற லறினும் படைமாட்சி வலிமை.
வெல்படையேற் சிறுமை துனிவறுமை யிலதே.
770 படைசான்ற தேனுந் தலையேன்றான் வேண்டும்.

## 78 அதி. படைச்செருக்கு

கல்நின்றார் பலரால் ; என்ஐமுன் நில்லேல் !
கான்முயல்எய் அம்பில் யானைபிழை வேல்மேல்.
பேராண்மை தறுகண் ஊராண்மை அதன்கூர்.
கையகளி றெய்தோன் மெய்வேலான் நகுமே.
775 விழிவேல்பட் டிமைப்பும் இழிவுவன்க ணவற்கு.

விழுப்புண் உறுநாள் வழுநாள்வன் கணற்கே.
சுழலிசையர் வேண்டா உயிரர்கழு லழகர்.
உறின்உயிரை அஞ்சார் இறைசெறினும் குன்றார்.
சொல்தவறாதவரைப்பிழைத்தொறுப்பார்எவரே.
காப்பார்கண் நீரேல் சாக்காடும் பெறுக!

## 79 அதி. நட்பு

செயற்கரிதும் நட்பின் வினைக்கரிதும் யாதே?
நல்நட்பு மல்கும்; புல்நட்போ அல்கும்.
நூல்நயம்போன் றறிஞர் கேண்மைபழ கினிது.
நகவன்று நட்டல் மிகைகளைவ தற்கே.
புணர்வன்று நட்பின் உணர்வேகி ழமையாம்.
முகநகுவ நட்பன்று; அகநகநட் பதுவே.
அழிவொதுக்கி ஆறுய்த்தல் லல்உழத்தல் நட்பு.
உடையிழந்தான் கைபோன் றடுத்துதவல் நட்பு.
கொட்பின்றி ஊன்றல் நட்பிருக்கை என்ப.
இனையரிவர்க் கியாமின் னம்எனல்நட் பன்று.

## 80 அதி. நட்பு ஆய்தல்

நாடிநட் பாயிற் கேடிலை; விடேலே!
ஆய்ந்துகொளான் கேண்மை சாமளவுந் துயரம்.
குணம்குடிகுற் றம்குன் றாவினந்தேர்ந் தியாக்க.
குடிப்பிறப்பன் பழியஞ் சவற்கொடுத்தும் நட்க.
அழஇடித்துச் சொல்லும் வழக்கறிவார் நட்க.
கேடும்நன்றால்: கிழமை நீட்டிக்காட் டுங்கோல்!
ஊதியம் பேதைநட்பு ஓரீஇவிடல் என்ப.
உட்குறுகல் உள்ளேல்; அறுநட்பும் கொள்ளேல்.
கெடுங்கால்கை விடுவார் கொடுங்கூற்றில் தீயர்.
மருவுகநல் லார்நட்பு; ஒரூஉவஅல்லார்க் கீந்தே.

## 81 அதி. பழைமை

கிழமைசிதை யாமை பழைமையாம் என்ப.
கெழுதகைமை நட்புக் குறுப்பமைதல் இனிமை.
கெழுதகைமை சாலாப் பழைமைநட்பென் பயனே.
கெழுதகையன் கேளான் செயின்விழைவ பழைமை.
பழைமை பிழைப்பின் பேதைமையோ கிழமை.
எல்லைகட வாரைத் தொல்லையி லும்விடேல்.
அழிவுவந்த செயினும் பழைமையன்பு அறுது.
கேளிழுக்கம் கேளிர் நாளிழுக்கல் நன்றே.
வழிவந்தார் கேண்மை விடார்விழைவ துலகு.
பழையார்கட் பிழையார் விழையாரான் விழைப.

## 82 அதி. தீ நட்பு

காதல்மிகு பண்பில் கேண்மைகுறை வினிது !
உறின்நட் டறிற்போம் அவர்நட் பெதற்கு ?
ஊதியநட் புறுவ கொள்பவர்கள் வருநேர்.
அமரகத்தாற் றறுக்கும் தமரிதல்த னிமைமேல்.
செய்தேமஞ் சேராத் தீயார்நட் பொழிக.
பேதைகெழூஉக் கறிஞர் பகைகோடி உறுமால்.
நகைநட்பிற் பகைமை பதின்கோடி நல்ல !
ஆவவுடற் றுவர்நட்பு ஓவுகசொல் லாதே !
வினைமொழிவே றுனர் கனவினும்இன் னாரே.
மனைக்கெழீஇ மன்றில் பழிப்பாரை ஒழிக !

## 83 அதி. கூடாநட்பு

வாய்ப்பளவுங் கூடி நீப்பவர்நட்பு ஒழிக.
இனம்போன்றார் கேண்மை பெண்மனம்போல் மாறும்,
பலகற்றும் மாணார் மனம்நல்லர் ஆகார்.
முகம்நகைஇ அகநஞ் சவரைஅஞ் சுகவே.
மனத்தமையார் சொல்லின் எனைத்தொன்றும் தேறேல்,

நட்டார்போல்சொலினும்ஒட்டார்சொல்தெளிவு
வில்வணக்கம் ஒன்னார் சொல்வணக்கம் தீது.
தொழுகையுளும் படையுண்டழுகையுமன்னதரோ
மிகச்செய்திகழ் வாரை நகச்செய்து கழிக.
பகைநட்க வரினே முகநட்டுத் தவிர்க.

## 84 அதி. பேதைமை

ஏதம்எய்திப் பொருள்தீர் பேதைமைஒன் றுண்டே!
கையலதில் காதல் செய்வதுபே தைமையே.
நாணன்நா டான்அன் பிற்பேணன் பேதை.
ஓதியுணர்ந் துரைத்தும் தானடங்கான் பேதை.
ஒருசெயலால் பேதை எழுமையளறு அழுந்தும்.
கையறியாப் பேதை செய்வினைபோம் கெடுமே
பேதைபொருள் கிளைஞர் பசிக்கப்பி றர்க்காம்.
கையகத்த பேதை மையல்களிப் பெய்தும்.
பேதையர்நட் பினிதே பீழைதராப் பிரிவால்.
மேதகையர் குழுவில் பேதைபுகல் இழிவு.

## 85 அதி. புல்லறிவு

அறிவின்மை இன்மை ; பிறிதின்மை அன்றே!
அறிவிலி உவந்தீ வதுபெறுவான் தவமே.
செறுநருக்கு மரிய அறிவிலிதற் கேடே.
ஒண்மையம் என்னும் எண்ணமே வெண்மை!
கல்லாத ஒழுகின் வல்லதூஉம் தவறும்.
அற்றம்மறைப்பெவன்தன்குற்றம்மறையானேல்?
அருமறை சோர்வான் பெருமிறை தனக்கே.
ஏவலுறுன் தேறுன் சாமளவும் ஓர்நோய்.
காணுதான் காட்டும் தான்காணுன் ; என்னே !
உளதில்லை என்பான் அலகைஆ வானே.

## 86 அதி. இகல்

பகுந்தீய நோயைப் பாரிக்கு மிகலே.
பகவென்ன செயினும் இகலின்னு; செய்யேல்.
இகலென்னும் நோய்நீங் கிடில்தவாப் புகழே.
இன்புளின்பம் இகலாம்துன்புள் துன்பம்கெடினே.
855 இகல்சாய்வுள் ளவரை மிகலூக்கு வாரில்.
இகலினிதென்பான்நாள்தவல்கெடலும்நணித்து.
இகல்மேவு மின்னார் மிகுபொருள்கா ணாரே.
இகல்சாய்த லாக்கம்; மிகல்சாய்த லாக்கும்.
ஆக்கம்எய்தி இகலின் ஊக்கிலதில் கேடே.
860 பலஇன்னல் இகலான்; நகல்ஆ௵ நலமே.

## 87 அதி. பகைமாட்சி

வலியரெதிர் வாகா; மெலியர்பகை மேக!
அன்புதுணை துவ்வி லான்வேறல் எங்ஙன்?
அஞ்சுமறி யானமைவி லீகலான் எளியன்.
சினநீங்கான் நிறைவில் அவன்யார்க்கும் எளியன்.
865 வழிவாய்ப்புப் பழிநோக் கான்பகைவர்க்கினியன்.
கழிபெருஞ் சினத்தன் காமத்த னழிவான்.
அடுத்தல்ல செய்வான் பகைகொடுந்துங்கொள்க.
குணனிலிகுற் றத்தன் இனனிலிமாற் றார்க்காம்.
அறிவிலா வஞ்சும் பகைசெறுநர்க் கின்பம்.
87,0 கல்லாதான்பொருளைக்கொள்ளாதார்க்கொளியில்

## 88 அதி. பகைத்திறம்

பகைத்தீயை ஒருவன் நகைத்தேயும் வேண்டேல்.
வில்லர்பகை கொளினும் சொல்லர்பகை கொள்ளேல்,
பகைசுற்றுங் கொள்வான் மிகுபித்தன் பேதை.
பகைநட்பாக் கொள்வான் தகைமைக்க ணுலகு.
875 துணையில்வழி பகைக ளிரண்டிலொன்றைச்சார்க.

அறிந்தறியார்த் தளர்வில் பரியேல் விடலே!
அறியார்முன் நோக்கல் பகைமுன்னர் மெலியேல்.
வலியதற்செய் தாக்கப் பகைச்செருக்கு மாயும்.
இளமுள்மரம் கொய்க வலிதாயில் கைபோம்.
செயிர்ப்பர்களை யாதார் உயிர்ப்பவுளர் ஆகார்.

## 89 அதி. உட்பகை

நிழல்நீரும் இன்னா தமருமன்னார் ஆப.
வாள்பகையின் வஞ்சக் கேள்பகைஅஞ் சுகவே.
மண்பகையுள் தெறாஉமுள் பகையஞ்சிக் காக்க.
அகம்மாணாப் பகைமை இனஏதந் தருமே.
உறன்முறையுள் பகைமை இறன்முறையாக் கெடுக்கும்.
உற்றவருட் பகைதான் எக்காலுங் கொல்லும்.
அரம்பொருதபொன்போலுரம்போமுட்பகையே.
உள்பகையுற் றகுடி செப்பின்பு ணர்ச்சி.
எள்பகவில் சிறிதாம் உள்பகையும் செறுமே.
உடம்படார் வாழ்வு குடில்பாம்போ டுறைவு.

## 90 அதி. பெரியோர்

பெரியாரை இகழார் பேராற்றல் உடையார்.
பெரியார்ப் பிழைக்கில் பேரா இடும்பை.
கொல்வேண்டில் செய்க அடலுடையார்க் கிழுக்கு.
ஆற்றுவார்க் கிழுக்கல் கூற்றைவிளித் தற்று.
வேந்துசெறப் பட்டார் யாண்டுறினும் ஆகார்
எரிசுடினு முய்வாம் பெரியர்பிழைத் துய்யார்.
உறுப்பாட்சிபொருட்பேறுஎவன்தக்கார்செறினே
மலையனையர் நினையில் நிலைஇயகுடி அழியும்.
உயர்குணத்தார் சீறின்வேந்தனும்வெந்துகெடும்.
தகைப்பெரியர் செறினேதொகைச்சார்பு மழியும்.

## 91 அதி. பெண்வழி

மனைவிழைவார் மாண்பயன் எய்தார்.
பெண்விழைவா னாக்கம் பெரிதொருநா ணுக்கும்.
இல்லாள்கண் தாழ்வான் நல்லார்முன் நாணும்.
மனையஞ்சும் வீணன் வினைவீறெய் தானே.
905 இல்லாளை அஞ்சி நல்லார்க்குநன் றாற்றான்.
இமையவர்வாழ்வுறினும்மனைவிழைவார் இழிஞர்.
பெண்ஏவ லாணில் பெண்ணே தகைத்து.
நல்லார்நட் புனாற்றார் இல்லவள்பெட் டவரே.
அறம்பொருளும் பிறவும் மனைவழியற் கில்லை.
910 எண்இடத்தார்க் கென்றும் பெண்ணுற் பேதைமையில்

## 92 அதி. வரைவின் மகளிர்

அன்பிலார்பொருள்நோக்கவரின்சொல்கொடிது.
பயனால்பண் புரைப்பார் நயன்நள்ளாது ஒழிக.
பொருள்பெண்டிர் முயக்கம் இருட்டேதில் பிணந்தழால்.
அருள்பொருளாய்அறிஞர்பொருள்பொருளார்த்தோயார்.
915 மதிமாண்ட தூயர் பொதுப்புல்நலம் தோயார்.
தகைசெருக்கார்ப் புல்லல் புகழ்பரிப்பார்க்கில்லை.
பிறர்நெஞ்சில் பேணுமவர்த்தோய்வார் தேய்வர்,
ஆயார்க் கணங்காம் மாயமகள் தோய்வே.
வரைவிலார் மென்றோள் வறிஞர்ஆழ் அளறு.
920 இருமனப்பெண் கள்சூ திவைமிடியர் தொடர்பு.

## 93 அதி. கள்

பகைவரஞ்சார் புகழு மிழப்பார்கள் விழைவார்.
உண்ணற்க கள்ளை; உணிலுண்க கெடுவார்.
தாய்முகத்து மின்னாக் களிஎவர்க் குவப்பே ?
பேணத்தீக் கள்ளால்நாண்எனும்பெண்நள்ளாள்.

பொருள்கொடுத்துமெய்க்கேமருளடுத்தலுண்டே?
உறக்கமிறப் பேனும் நறவம்நஞ்சே மானும்.
உள்ஒற்றிச் சிரிப்பார் கள்ஒற்றிச் சாயேல்.
ஒளித்தவெளிப் படலாம் களித்தறியேன் என்னேல்,
களித்தானைத் தேற்றல் நீருள்தீக் காட்டல்.
கள்மயக்கம் குடிப்பார்க் குள்மயக்கம் தராதோ?

## 94 அதி. சூது

தூண்டில்விழை மீன்போன்ம் வேண்டற்க சூதே.
ஒன்றுறநூ றிழக்கின் நன்றுண்டோ சூதீர்?
உருளாயங் கூறில் பொருளாயம் புறம்போம்.
சிறுமைபல வறுமை சீரழிசூ தாக்கும்.
கவறுவந்தார் முன்னு ளிருந்துழன் றெழிந்தார்.
வயிறுறார் உழப்பர் கவறுவக்கு மவரே.
கெடும்செல்வம் பண்பும் அறும்காலச் சூதால்.
பொருளருள்கொல் சூது பொய்யொடல்ல லீயும்.
உடைசெல்வ முள்நீர் கல்விகெடும் சூதால்.
உழத்தொறூஉங் காதற் றுயிர்போலும் சூதே.

## 95 அதி. மருந்து

வளிமுதல மூன்றும் மிகின்குறையின் நோயே.
அருந்தியபோற் றியுண்ணின் மருந்தெனவேண் டாவே,
பெற்றஉடல் நீடற் கற்றதறிந் துண்க.
அற்றதறிந் தேற்ற துய்க்கபசித் தாற்ற!
மாறல்ல மறுத்தூ ணூறில்லை உயிர்க்கே.
அறின்அளவூண் இன்பம் கழியூண்நோய்துன்பம்.
அளவறியா துண்ணிற் பெரிதளவாம் நோயே.
நோய்முதலு நாடி வாய்நாடித் தணிக்க.
உற்றவன்நோய் காலம் கற்றவன்தேர்ந் தாற்ற!
உற்றவன்நோய் தீர்ப்பான் மருந்துழையன் நாற்பால்,

## ஒழிபு

### 96 அதி. குடிமை

செப்பமுநாண் என்ப இற்பிறந்தார்க் குரிய.
நல்ஒழுக்கம் வாய்மை நாணிகவா குடிமை.
நகைஈகை இன்சொல் இகழாமை குடிக்கோள்.
அடுக்கியவே பெறினும்குடிப்பிறந்தார் பிறழார்.
வழங்குவதுள் வீழ்ந்தும் பழங்குடிபண் பிகவா.
குலம்வாழ்தும் என்பார் சலம்தாழ்வு புரியார்.
குடிக்குற்றம் வானுள் மதிக்கறைபோல் காணும்.
நலத்தாசை இல்லான் குலம்ஐயப் பாற்று.
நிலத்தியல்புமுளைபோல்குலத்தியல்சொல்காட்டும்
நலம்வேண்டும் நாணே; குலம்வேண்டும் பணிவே.

### 97 அதி. மானம்

இன்றியமை யாதுங் குன்றவரின் விடுக!
சீரினுஞ்சீ ரல்ல செயார்சீராண் மையினர்.
பெருக்கத்துப் பணிவாம் ; சுருக்கத்தே லுயர்வே.
நிலைஇழி கடையர் கழிமயிர் அனையர்.
குன்றுருங் குன்றிக் குறைசெயில்குன் றுவரே.
இகழ்நரைப்பின் செல்லின் புகழுயர்வ தில்லை.
ஒட்டார்பின் வாழ்வில் கெட்டொழிதல் நன்று.
பெருந்தன்மைஅழியின்மருந்தோஊன்வாழ்க்கை?
மயிர்நீப்பின் வாழா மான்அனையன் மானி.
இழிந்துயிர்வா ழார்சீர் தொழுதேத்து முலகு!

### 98 அதி. பெருமை

ஒருவரது செல்வம் ஒளி;அல்லது இளியே.
பிறப்பொக்கும் எல்லார்க்கும்; சிறப்பவை செயலால்,
உயர்விழிவு செயலின் அரியவற்றான் அமையும்.
நிறைமகளிர்போலும்பெருமைசெய்வார்க்காகும்.
பெருமையவ ராற்றின் அருமையசெய் பவரே.

பெரியரைப்பேண் நோக்கம் சிறியர்உணர்ச் சியில்இல்.
சீரிலர்கட் படினே சிறப்பிறப்புஅற் றாகும்.
பெருமை பணிவென்ப ; சிறுமைஅணி வதுவே.
பெருமைதருக் கின்மை; சிறுமைதருக் குண்மை.
980 குறைமறைக்கும்பெருமை அஃதுரைக்கும்சிறுமை.

## 99 அதி. சான்றாண்மை

நல்லஎல்லாம் அறிந்து கொள்வதுசான் றாண்மை.
குணம்சான்றோர் நலனே; பிறநலமன் றாமே.
அன்புறவு நாண்கண் வாய்மைஐந்தும் சால்பு.
கொலாநலமே நோன்பாம்; தீயதுஒரால் சால்பே.
985 மாற்றாரை மாற்றும் ஆற்றுவார்ப் பணிவு.
சால்புரைகல் தோல்வி அலாரிடத்தும் கோடல்.
இன்னாசெய் தார்க்கும் இனியசெயார் சால்பென்?
வறுமைஇழி வன்றால் சால்புவன்மை உண்டேல்.
சால்பெனுமா ழியவர் ஊழியினும் பெயரார்.
990 சான்றவர்குன் றுவரேல் தாங்காது நிலனே.

## 100 அதி. பண்புடைமை

எண்பதத்தால் யார்க்கும் எளிதுஎய்தல் பண்பு,
பண்புடைமை அன்பும் குடிப்பிறப்பும் என்ப.
மக்களொத்த லுறுப்பா லன்று;செறி பண்பால்.
நயன்நன்றி புரியும் பயனால்பண்பு உயரும்.
995 பகையுளும்பண் புடைமை பாடறிவார் காண்பர்.
பண்புடையார்ப் படலான் உண்டிந்த உலகே.
அரக்கூரர் பண்பில் லவர்மரம்ஆ வாரே.
நயநண்பு செயார்க்கும் பண்பாற்றார் கடையர்.
பண்பிலர்க்கு ஞாலம் நண்பகலும் இருளே.
1000 நலனில்லா னாக்கம் கலந்தீதால் பால்போன்ம்.

## 101 அதி. நன்றியில் செல்வம்

பணமிகுத்தும் துவ்வான்பிணம்பிறிதுசெயலென் ?
ஆம்பொருள்சேர்த் தீயான் பேய்ப்பிறப்பெய் துவனே.
ஈட்டியுமநன்று ஆற்றான் தோற்றம்நிலக் குப்பொறை.
நச்சலுறான் எச்ச இச்சைஎது கொல்லோ ?
1005 கொடுப்பதுய்ப்பதில்லான்கோடியடுக்கினும்என் ?
தான்துவ்வா னீயான் பொருட்கேதமேயாம்.
நலத்தமியள் முத்தற்று இலார்க்குதவாப் பொருளே,
நச்சலிலான் செல்வம் எட்டிபழுத் தற்று.
ஈதலிலான் தற்செற் றீட்டல்பிறர்க் கேயாம்.
1010 சீருடையர் சிறுநோய் மாரிவறந் தற்று.

## 102 அதி. நாணுடைமை

இழிவுஒழிவ நாணும்; பிறநுதலார் நாணே !
ஊண்உடைஓர் ஒக்கும்; நாண்மாந்தர்ச் சிறப்பு.
ஊன்தாங்கு முயிர்கள் ; நாணூன்றும் சால்பு.
நாண்அறிஞர்க் கணியே; நாணில்நடை பிணியே.
1015 பிறர்பழிதம் பழியா நாணுநர்க்குப் புகழாம்.
நாணலது ஞாலம் பேணலர்மே லவரே.
உயிர்நாணில் சிறப்பாக் கருதார்க ளுரவோர்.
பிறர்நாணும் அதுதான் நாணானேல் தவறு.
குலம்பேணான் கெடுவான்; நலம்பேணானழிவான்!
1020 நாணில்லார் இயக்கம் நாண்பாவை மருட்டே.

## 103 அதி. குடிசெயல்

கருமம்கை தூவான் பெருமைப்பீ டுடையான்.
ஆள்வினையும் அறிவும் நீள்குடியே உயரும்.
செய்வல்குடி என்னின் தெய்வம்உந்தி முந்தும்.
தாழாதான் குடிமை சூழாமே தழையும்.
1025 குற்றமிலான் குடிமை சுற்றமுறல் என்ப.

நல்லாண்மை ஒருவர்க்கு இல்லாண்மை ஆக்கல்.
அமரகவன் கணர்போன்ம் தமரகத்தார்ப் பொறையே.
குடிசெயற்குப் பருவ மில்லை,கெடும் மிடியே.
குடும்பம்காப் பவன்மெய் இடும்பைக்கொள் கலனே.
அடுத்தூன்று ளிலையேல் இடுக்கண் குடிக்கே.

## 104 அதி. உழவு

சுழன்றுமேர்ப் பின்ன துழன்றும்உழ ழவுதலை.
ஆற்றாரைப் பொறுக்கும் அச்சாணி ஏரே.
உழுதுண்பார் வாழ்வார் தொழுதுண்பார் பிறரே.
அலகுடைய நிழலார் பலகுடைகீழ்க் காண்பர்.
உழுதுண்போர் இரவார் உவந்தீவர் கரவார்.
உழுவார்கை இலையேல் துறந்தார்க்கும் நிலையில்.
பண்ணயத்தால் நிலத்தாம் பயனளப்ப ரியதே.
ஏர்எருகட் டல்நீர் காப்பினிய மேன்மேல்.
செல்லானேல் ஊடும் இல்லாளாம் நிலமே.
இலம்என்னச் சோம்பின் நிலநல்லாள் நகுவள்.

## 105 அதி. வறுமை

இன்மையின்இன் னாத இன்மையின்னா மையே.
இன்மைஎன்னும் பாவி இருமையுமின் றிவரும்.
தொல்குடியும்சொல்லும்தொகையழிக்கும்மிடியே
இற்பிறந்தார் கண்ணும் மிடிசொல்சோர்வுதரும்.
நல்குரவாம் துன்புள் பல்லிடும்பை படுமே.
மிடியார்நற் சொல்லும் பொருளும்சோர்வுபடும்.
அறஞ்சாரா மிடியன் பிறன்போல்வான் தாய்க்கும்
கொன்றுசென்ற நிரப்பஃது இன்றும்வரு மேகொல்?
நெருப்புளுறங் கலுமாம் நிரப்பில்கண்பா டரிது.
துப்புரவில் லாதான் துறவாமை தீமை.

## 106 அதி. இரவு

இரத்தக்கார்க் கரப்பி னிழிவுகரப் பவர்க்கே.
இரத்தற்கால் துன்ப மின்றாயின் நன்று.
கரப்பிலார் முன்னின் றிரத்தலு மோரேர்.
கரப்பறியா தவர்மாட் டிரத்தலுமீ வதுபோன்ம்.
1055 கரப்பிலா ருளரால் இரப்பதாம் செய்கை.
கரப்பிடும்பை யின்றேல் நிரப்பிடும்பை கெடுமே.
இகழ்ந்துள்ளா தீயின் மகிழ்ந்துள்உள் உவப்பர்.
இரப்பாரை இல்லா நிலம்பாவை யற்று.
இரப்பார் இலரேல் ஈவார்ப் புகழென் ?
1060 ஈயாரை யிகழேல் இடும்பைநிரப் பதுவே.

## 107. அதி. இரவச்சம்

கரவாதார் கண்ணும் இரவாமை கோடி.
இரந்துவாழ்க என்னில் பரந்துஅழிக மலரோன்.
இன்மைஇன்னல் தீர இரப்பம்என்றல் வன்மை.
இடமிலாக் காலு மிரவாமை பெருமை.
1065 தெளியடுநீ ரேனும் தேடுணே இனிது.
ஆவுக்கு நீரென் றிரப்பதும்நாக் கிளிவே.
கரப்பார் ஒருஉவற் கிரப்பா ரிரப்பன்.
இரவென்னுந் தோணி கரவுப்பார்க் குடையும்.
உள்ளுருக்கு மிரவே உளதழிக்கும் கரவே.
1070 இல்லெனிற்சாம் அவற்குச் சொல்லவல்லாற்கு எவனே ?

## 108 அதி. கயமை

மக்களில் கயவர் ஒப்பார்யாம் காணோம்.
அவலமிலா நெஞ்சில் கயவரும்நல் லவரே.
ஏவணசெய் கயவர் தேவரனை யவரே.
அகப்பட்டி காணின் மிகப்படுஉங் கீழே.
1075 அச்சமே கீழ்களது ஆசாரம் என்க.

மறைபிறர்க் குரைப்பால் அறைபறையே கயவர்.
கொடிறுடைப்பார்க் கன்றிக் கயவர்பய வாரே.
கரும்பும் கயவரும் நெருக்கிற் பயன்தரும்.
உடுப்பஉண்ப காணின் வடுக்கூறும் கீழே.
உற்றக்கால் விற்கும் கயவரென்கொல் செய்யார்?

பொருள் முற்றும்

## இன்பம் - களவு

**இன்பம்** என்பது மேல்கூறிய அறத்தின் வழியால் ஈட்டிய பொருளைக் கொண்டு இப்பிறப்பிலே அடையத் தகுவதாகிய வாழ்க்கைநிலை. இஃது இரண்டு பிரிவுள் அடங்கும்.

**களவு:** அதாவது பெற்றோரால் கொடுத்தற்குரிய தலைவியைத் தலைவன் கண்டு இருவரும் உள்ளத்தால் ஒன்றுபடும் வகை. முதலில் பிறர் அறியாதிருந்து கற்பின் வழிநின்று விளங்குவதால் இக்களவு குற்றமற்றது என்பர்.

### 109 அதி. தகைஅணங்கு

*[தலைவியின் அழகு தன்னை வருத்தியதாகச் சொல்லுதல்]*

அணங்குகொல் மயிலோ மாதர்கொ லாம்இவர்.
தாக்கணங்கு தானைக் கொண்டதிவள் நோக்கு!
பெண்தகைக் கமர்த்தகண் கண்டனம் கூற்றே.
பெண்பேதை அமர்க்கண் கண்டாரை உண்ணும்.
கூற்றமோ கண்ணோ பிணைநோக்கும் போலாம்.
கொடும்புருவம்மறைப்பின்நடுங்கஞர்செய்யலகண்.
கடாயானைக் கட்படாம் படாஅமுலை மேல்துகில்.
நண்ணாருட் கும்பீடு ஒண்நுதற்கு உடைந்த!
மடநோக்கும் நாணும்உடையாட்கேன் அணிகள்.
காணமகிழ் செய்யும் காமம்கள் அன்று.

## 110 அதி. குறிப்பறிதல்

[ஒருவர் குறிப்பை ஒருவர் அறிதல்]

நோயும் மருந்தென நோக்கிரண்டு இவட்கு.
கண்சிறு நோக்கம் காமத்தில் பெரிது.
நோக்கிஇறைஞ் சினரது யாப்புஅட் டியநீர்.
யான்நோக்க நிலநோக் கிவள்மெல்ல நகல்என்?
1095 குறிக்கொளாள் ஒருகண் சிறக்கணித் துநகும்!
உறுதவர்போல் சொலினும் செறுதவர்சொல் தெளிவு.
செறூச்சிறுசொல்செறுநோக்குறூர்போன்றூர்குறிப்பு.
பசைஇப்பை யநகல் அசைஇயற்கு ஓரேஎர்.
ஏதிலாப் பொதுநோக்கு ஆர்தல்கா தலர்கண்!
1100 கண்கள்நோக் கொக்கின் என்கொல்வாய்ச் செலவே?

## 111 அதி. கூடி மகிழ்தல்

[இருவரும் உள்ளத்தால் ஒன்றுபட்ட மகிழ்ச்சியைத் தெரிவித்தல்]

ஐம்புல நுகர்வும் ஒண்தொடிக் கண்உள!
பிணிக்குமருந்து அயல; அணியிழைநோய்க் கவளே!
மென்தோளின் இனிதுகொல் செங்கண்மால் உலகே?
நீங்கில் சுடும்தீ யாண்டுப்பெற் றூள்இவள்?
1105 வேட்டபோதுஅவையவை போலுமால்இவள்தோள்!
தளிர்ப்பத் தீண்டலின் இவள்தோள் அமிழ்தே.
இல்இரீஇப் பாத்தூணின் இனிதிவள் முயக்கு!
வளிஇடை போழப் படாஅமுயக்கு இனிது.
ஊடுதல் உணர்த்தல் புணர்தல்கா மப்பயன்.
1110 அறிதொறும் அறியாமை கண்டற்றூல் காமம்!

## 112 அதி. நலம்புனைவு

[தலைமகள் நலத்தைப் புகழ்ந்து தலைமகன் சொல்லுவது]

அனிச்சம்வா ழியநீ! நின்னின்மெல் லியலிவள்.
பலர்காணும் மலர்கொல் இவள்கண்மால் நெஞ்சே!
உறுப்புகட் குவமை உண்டுகொல் இவட்கே?
இவள்கண் காணில் குவளைகள் நாணும்.
அனிச்சங்கால் களையாள் நுசுப்பாங்கொல்? இறுமே!
மதிமுகம் தேரூப் பதிகலங் கியமீன்!
குறைநிறை மறுமதி இவள்முகம் நிகரோ?
இவள்முகம் நிகரின் மதிகா தலையே!
முகம்ஒத்தி மதிஏல், பலர்காணத் தோன்றல்.
அனிச்சம்தூ விஇவள் அடிக்குழ் நெருஞ்சி!

## 113 அதி. காதல்சிறப்பு

[காதலர் தம் காதல் மிகுதியைக் கூறி மகிழ்தல்]

பால்தே னூறிய பணிமொழி அதரம்.
உடம்புயிர் என்ன மடந்தையாம் அன்னம்.
கருமணியில் பாவாய், திருநுதற் கிடமீ!
வாழ்தல்உயிர்க்கு அன்னள்; சாதல்அவள் பிரிவே.
உள்ளலன் மறவேன் ஒள்அமர்க் கண்இயல்.
கண்ணினுள் பிரியலர் காதல்நுண் ணியரே.
கண்ணுட் காதலர் கரப்பாக்கு எழுதேன்.
நெஞ்சுளார் வேபாக்கு அஞ்சுவல் உணவே!
இமைப்பின் கரப்பாக்கு அறிவல்ஊர் அலர்என்?
உவர்துளத் துறைவார் இகர்துறைஏ திலரே!

## 114 அதி. நாணுத்துறவு

[தங்கள் நாணம் விட்டுப்போனதைச் சொல்லிக்கொள்ளல்]

காமம்உழந்து உழல்வார்க்கு ஏமமடல் வலிமை.
உடல்உயிர்நாண் நீக்கி நிறுத்துமடல் ஊரும்.
நாண்ஆண்மை பண்டும் இன்றுமடல் உடையேன்!
காமக் கடும்புனற்கு ஆண்மைநாண் புணையே?
1135 மடலொடுமா லைதுயர் குறுந்தொடிதந் தாளால்.
பேதையால் கண்படா யாமமடல் ஊர்வல்!
கடற்காமம் உழந்தும் மடலேருள் தகையள்.
அரியர்அளி யவர்என்று ஒளியாது காமம்.
அறியரென்னை மறுகின் மருண்டதென்கா மமுமே!
1140 யாம்காண நகுப; தாம்படா வாறு.

## 115 அதி. அலரறிவுறாஉ

[தங்களைப்பற்றி ஊரில் தோன்றும் பழியை அறிவித்தல்]

அலரால்ஆ ருயிர்ஆம்; பலரறியார்; நன்றே!
அவளருமை அறியாது அலரெமக்கீந் ததிவூர்.
ஊரறி கவ்வை பெறுதுபெற் றதன்நேர்.
அலரலர்த்தும் காமம் அஃதின்றே லஃகும்.
1145 களிப்பாருண்டொறும்போல்வெளிப்படுங்கவ் வினிது.
ஒருநாள்கண் டதுயாம்; உலகுபரந் ததுஅலர்.
அலர்அன்னை வெஞ்சொல் எருநீர்என் நோய்க்கே!
ஏதிலார் அலரால் காமநோய் மிகுமால்.
பிறர்நாணும் நிலையேம் நாணுதல்யாண் டையதே?
1150 ஊர்க்கவ்வை நன்றுல் உதவுவர்கா தலரே!

### கற்பு

இது, கொண்டானிற் சிறந்த தெய்வம்இல்லை எனவும் அவனை இன்னவாறு வழிபடுக என்றும் இருமுதுகுரவர் கற்பித்த ஒழுக்கமுறையால் இல்லறம் நிகழ்த்துதல்.

## 116 அதி. பிரிவாற்றாமை

[தலைவன் பிரிவைத் தலைவி ஆற்றாது வருந்துதல்]

செல்லாயேல் சொல்க ; வரவுரைவாழ் வார்க்கே.
பார்வலின்பம் புணர்வு பிரிவுபுன்க ணுடைத்து.
அறிவர்கண்ணும் பிரிவுண்டு ; அரிதரோஒ தேற்றம்.
அளித்துஅஞ்ச லென்றார் பிரியில்எவர் தவறே?
1155 உயிரோம்பிற் பிரிவோம்பு அரிதுஏகிற் புணர்வே.
பிரிவுரைவன் கண்ணர் வரவுநசை அரிது.
துறவறிந்த வளைகள் சோர்வனசொல் லாவோ ?
இனம்இல்ஊர் அதனூங்கு இனியர்பிரிவு இன்னா.
தொடிற்சுடும் அல்லது விடிற்சுடு மோதீ !
1160 அறிதுஆற்றி நோய்ஒரீஇப் பிரிவின்வாழ் வார்பலர்.

## 117 அதி. படர்மெலிவு

[தன் பிரிவுத் துன்பத்தை நினைந்து மெலிந்து வருந்துதல்]

மறைப்பேன்மன்நோயிஃ திறைக்கும்நீர்போல்மிகும்.
கரப்புஆற்றேன்நோயவர்க்குரைத்தலுநாண்தருமே.
காமமும் நாணும்என் உயிர்காவாத் தூங்கும்.
நனவில்நல்கார்த் தேடிக் கனுத்தரவாம் காமம்.
காமக்கடல் உண்டு ஏமப்புணை இல்லை !
1165 துயர்நட்பில் செய்வார் துப்பின்எவன் ஆவர் ?
கடல்இன்பம் காமம் அடில்துன்பம் பெரிது.
கடுங்காமம் நீந்திக் கரைகாணேன் நானே.
அளித்துஉயிர் துயிற்றி எனைத்துணைகொண் டதிரா,
1170 உள்ளம்போல் செல்லின் வெள்ளம்நீந் தலகண் !

## 118 அதி. கண்விதுப்பு

*[தலைவனைக் காணும் விரைவினாலே கண்கள் வருந்துதல்]*

கண்காட்டக் கண்டேன் தண்டாநோய் கலுழ்வுஎன்?
தெரித்துணரா நோக்கிப் பரியாக்கண் கலுழ்வுஎன்?
கதுமெனக்காண் கண்கள் கலுழ்தல்நகைப் பாற்று,
ஆராநோய் எமக்கீந்து உலர்ந்தனநீ ருண்கண்.
1175 கடல்சிறிதாம் நோய்தந் திடப்படாஅ என்கண்.
எமக்கிந்நோய் செய்கண் இதற்படலோ இனிதே.
விழைந்திழைந்து காண்கண் உழந்துள்நீ ரறுக!
பேணார்பெட் டவரைக் காணாதமை விலகண்!
வாராக்கால் துஞ்சா வரில்துஞ்சா அஞர்க்கண்!
1180 அறைபறைஎன் கண்போல் மறைபெறலூர்க்கரிதே.

## 119 அதி. பசப்புறுபருவரல்

*[தலைவனைக் காணாததால் உடலில்உண்டாகிற மாறுபாடு கண்டு வருந்துதல்]*

உடம்பட்டுப் பசந்தேன் பண்புயார்க் குரைக்கோ?
அவர்தந்த தகையால் இவர்ந்ததென்மேல் பசப்பு!
சாயலும்நாண் கொண்டே நோய்ப்பசலை தந்தார்.
உள்ளுவென் உரைப்ப தவர்திறம் பசப்பென்?
1185 அங்கவர் செலக்கண்டு இங்கூர்வ பசப்பு.
விளக்கற்றம் இருட்காம் முயக்கற்றம் பசப்பு.
புல்லிஇடை பெயர அள்ளிற்றுப் பசப்பு.
பசந்தாள்என் பதலால் துறந்தார்என் பார்இல்.
நயப்பித்தார் நலனேல் படப்பசக்க மேனி!
1190 நல்காமை தூற்றார் எனில்பசப்பேன் நன்று.

## 120 அதி. தனிப்படர்

[துன்பமிகுதி தன்னிடத்ததாகக் கூறுதல்]

தாம்ஒன்றிப் பெற்றார் பலர்காழ்இல் கனியே.
வீழ்வார்க்கன் னார்அளி வாழ்வார்க்கு வான்போன்ம்.
வாழ்நம்என்னும் செருக்கு வீழ்வார்வீழ் வார்க்கே!
கற்பினள்மாண்பு என்னும் கணவன்விழை யானேல்?
1195 நாங்காதல் என்னும் தாம்அதுகொள் ளாரேல்?
ஒருதலைக்காம் இன்னாது இருதலைக்காப்பு இனிது.
ஒருவர்பட நின்றான் பிறர்படர்கா ணான்கொல்!
விழைவரின்சொல் பெறாது வாழும்வன்க ணாரில்.
நசையர்நல்கார் எனினும் இசைஇனிய செவிக்கு.
1200 உறார்க்குஉரையென் நெஞ்சே கடல்செறாஅய் வாழி!

## 121 அதி. நினைந்தவர்

[தலைவன் தலைவி தாம் தனியாய் முன்கூடியதை நினைந்து வருந்துதல்]

உள்ளினும் பெருமகிழ் செய்காமம் இனிது.
எனைத்தினிதே காமம் அவர்நினைவிற் பிறிதில்.
சினைத்தழியும் தும்மல் நினைத்துமறைந் தார்கொல்?
யாமவர்நெஞ் சுளேங்கொல்? எம்நெஞ்சோ உளரே!
1205 தம்நெஞ்சு காப்பார் எம்நெஞ்சேன் நாணார்?
உற்றநாள் உள்ள உளேஎன்மற் றிலனே.
உள்ளினுள்ளஞ் சுடுமேல் மறப்பினென் படுகோ?
மிகநினைத்துங் காயார் அவர்செய்சிறப் பன்றோ!
வேறல்லம் என்றார் அளியிலுயிர் விளியும்!
1210 விடாச்சென்றார் காணப் படாதிவாழ் மதியே!

## 122 அதி. கனவுநிலை

[தலைவி தான் கண்ட கனவு நிலையைத் தோழிக்குச் சொல்லுதல்]

காதலர் தூ துவந்த கனவினுக்கென் செய்கோ ?
கண்இரப்பத் துஞ்சில் கலந்தார்க் குரைப்பென்.
நனவில்நல்கா தாரைக் கனாக்காட்ட வுளன்யான்.
நனவில்நல்கார்த் தேடிக் கனாத்தரவாம் காமம்.
நனவுகொண்ட இன்பம் கண்டகனவு இனிது.
நனவில்லை யாயின் கனவில்நீங் கலர்மன்.
நனவில்நல்காக் கொடியர் கனாப்பீழிப் பதெவன் ?
துஞ்சில்தோள் மேலர் விழிப்பில்நெஞ் சொளிப்பர்.
நனவில்நல்கா தாரைக் கனாக்காணார் நோவர்.
நனவில்நீத்தா ரென்பர் கனவறியா ஊரர்.

## 123 அதி. பொழுதுகண்டு

[மாலைப் பொழுது வருவது கண்டு தலைவி மனம் இரங்குதல்]

மணந்தார் உயிருண் மாலையோஓ வேலை !
புன்கணைநீ பொழுதே ! வன்கணைநீ துணையோ ?
பனிப்புன்கண் மாலை துனித்துன்பம் வளர்க்கும்.
காதலர்இல் வழிகொல் ஏதிலர்போன்ம் மாலை.
காலைக்கென் செய்தேன்; மாலைக்கேன் பகையே ?
அவர்அகலாக் காலை மாலைபகை அறியேன்.
அரும்பிப்போ தாகி மாலைமலர் விந்நோய்.
அழல்போலும் மாலைக் குழலாயன் தூது.
மதிமயங்கு மாலை பதிகலங்க வருமால்.
பொருண்மாலை யவரால் உயிர்மாயும் மாலை.

## 124 அதி. உறுப்புநலன்

[தலைவியின் உறுப்பு அழகு அழிதலான நிலைமை]

சிறுமைசெய்தா ருள்ளி நறுமலர்நா ணினகண்.
நயத்தார்நிலை சொல்லும் பசந்தபனிக் கண்கள்.
மணநாள்வீங் கியதோள் தணந்ததறி விப்ப !
தொல்கவின்வா டியதோள் தொடிசோரும் நன்றே !
1235 கொடியர் கொடிதுரைக்கும் தொடிகவின்வா டியதோள் !
வாடலுரைத் தவர்பால் பாடுபெறுஅய் நெஞ்சே !
முயங்குகை ஊக்கப் பசந்ததால் நுதலே.
முயக்கில்வளி போழப் பசந்தபெரு மழைக்கண்.
1240 ஒண்ணுதல் செயக்கண் டென்கண் பசந்த!

## 125 அதி. நெஞ்சொடு

[மனதொடு சொல்லிக் கொள்ளுதல்]

எவ்வநோய் தீர்க்கும் மருந்துசொல் நெஞ்சே !
காதலிலார் நெஞ்சே, நோவதுபே தைமையே.
பரிந்துள்ளல் நோயில் லவருளிப் பரிவென் ?
எனைத்தின்னுங் கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே !
1245 செற்றூர் எனக்கை விடலுண்டோ நெஞ்சே.
பொய்க்காய்வு காய்தி புலர்ந்துணராய் நெஞ்சே.
காமம்நாண் இரண்டு பொறேன்விடுநன் னெஞ்சே.
பரிந்துநல்கார் பின்செல் வாய்பேதை நெஞ்சு.
உள்ளத்தார் உள்ளி எவண்சேறி நெஞ்சே ?
1250 துன்னரைத் துறவேம் இன்னுமிழத் தும்கவின்.

## 126 அதி. நிறை அழிதல்

[தலைவி அடக்குமவற்றை அடக்க மாட்டாது வாய்விட்டுச் சொல்லுதல்]

காமக் கணிச்சி நிறைநாண் உடைக்கும்.
யாமத்து மாளுங் காமம்கண் ணின்றே.
யான்மறைப்பக் காமம் தும்மல்போல் தோன்றும்.
நிறையுடையேன் காமம் மறைஇறந்து படுமே.
1355 செற்றார்பின் செலாமைஉற் றாரறிவ தன்று.
செற்றவர்பின் சேறல் உற்றதுயர் நன்றே.
பேணியார் செயலில் நாண்கா ணலமே.
பன்மாயக் கள்வன் பணிமொழியா லொழிதும்.
புலப்பச் செல்மனம் கலப்பப் புல்லினென்.
1360 நிணந்தீநெஞ் சினர்க்குப் புணர்ந்தூட லுண்டோ?

## 127 அதி. அவர்வயின்

[பிரிந்த தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் காண விரைதல்]

நாளொற்றி விரலுங் கண்வாள்தேய்ந் தனவே.
மறப்பனேல் தோள்மேல் கலன்கழ லும்மே.
உரல்நசைஇச் சென்றார் வரனசைஇ உளேன்யான்.
கூடிய காமம் கோடுகோ டேறும்.
1265 கண்ணாரக் காண்க நீங்குமென் பசப்பு.
வருகஅவர் ஒருநாள் பருகுவென்நோய் கெடவே.
புலப்பேன் புல்லுவென் கலப்பன் அவர்வரின்.
வென்றீக வினையாம் மனைவிருந் தயர்கம்.
வருநாள்வைத் தேங்கு மவர்க்கொருநாள் எழுநாள்.
1270 உள்ளமுடைந் துக்கால் பெறின்பெற்றும் உறின்என் ?

## 128 அதி. குறிப்பு

*[ஓர்வர் குறிப்பை ஒருவருக்கு அறிவித்தல்]*

கரப்பினுங்கை யிகந்துண் கண்ணுரைப்ப துண்டே.
கண்நிறைபே தைக்குப் பெண்நீர்மை பெரிது.
மணிதிகழ்நூல்போலும் இவளணிக்கொன்றுண்டால்.
முகையுள்நறு மணம்போனறு இவள்நகையொ ன்றுடைத்து.
செறிதொடிசெய் கள்ளம் உறுதுயர்தீர் மருந்து.
பெரிதாற்றிக் கலத்தல் அரிதால்தற் சூழ்வே.
தண்ணவர் தணந்தமை முன்னமுணர்ந் தவளே.
நெருநற்றுச் சென்றார் பசந்தெழுநா ளேம்யாம்.
தொடிமென்றோள் நோக்கி அடிநோக்கு மவளே!
கண்ணால்சொல் இரவு பெண்ணிற்பெண் மையது.

## 129 அதி, புணர்ச்சி விதும்பல்

*[இருவரும் கலந்து வாழ விரும்புதல்]*

உள்ளில் காணில் களிமகிழ் வினகண்.
பனைத்துணை மிகீஇயர் தினைத்தனையும் ஊடார்.
பேணாதார் செயினும் காணாதமை யலகண்!
ஊடற்குச் சென்றேன் கூடிற்றென் நெஞ்சு.
எழுதுறு கோல்போல் பழிகா ணலனே.
காணில் தவறிய காணேன் மன்னே.
உய்ப்புனல் பாய்வில் பொய்ப்புலந் தென்னே ?
இளித்தக்க செயினும் களித்தற்றுன் மார்பு.
மலரினுமென் காமம் சிலரிதன்செவ் வியரே.
கண்துனித் தென்னினும் புல்லுவி துப்பினள்.

## 130 அதி. நெஞ்சுடன்

[மனதோடு புலந்து கொள்ளுதல்]

அவர்க்காகு மவர்நெஞ் சென்நெஞ்சே னாகாய் ?
உறாஅர்க்கண்டுஞ் செறாஅரெனச் சேறிஎன் நெஞ்சு !
பெட்டேகு நெஞ்சே ! கெட்டால்நட் டாரில்.
துனிசெய்து துவ்வாய் இனியாரென் நெஞ்சே ?
1295 பெறாதினும் பெறினும் அஞ்சுமென் நெஞ்சம்.
தனிஇரீஇ நினைவில் தினீஇயதென் நெஞ்சு !
அவர்மறவா நெஞ்சால் நாணுமறந் தேன்நான்.
எள்ளின்இளி வாம்என் றுள்ளும்உயிர் நெஞ்சு.
தம்நெஞ் சில்வழி துன்பத் தெவர்துணை ?
1300 தம்நெஞ்சா காதேல் பிறர்நெஞ்சோ தஞ்சம் ?

## 131 அதி. புலவி

[தலைவியும் தலைவனும் ஒருவரோடு ஒருவர் புலத்தல்]

புல்லாப் புலத்தியவர் அல்லல்நோய் காண்கம் !
உப்பமை புலவி மிக்கவி டேலே !
புலந்தார்ப்புல் லாமை அலந்தார்க்கல் லல்தரும்.
வாடியவள் ளியறாஉ ஊடியர்ப்புல் லாமை.
1305 நலத்தகைநல் லார்க்கேஎர் புலத்தல்தகை யகத்து !
துனிப்புலவி இன்றேல் கனிகருக்காய் காமம்.
ஊடலினும் துன்ப முண்டுபுணர் நினைவால்.
நோவறி காதல ரில்வழி நோவென் ?
நீர்நிழலஃ தினிதே புலவியுமன் னதரோ !
1310 ஊடல்உணங் கவலார்க் கூடுவம்என் பதவா !

## 132 அதி. புலவி நுணுக்கம்

[புலத்தலின் நுணுக்கமான உணர்ச்சி]

பெண்கள்நண்ணான் மார்பம் நண்ணேன்ப ரத்த!
ஊடலில் தும்மினள் நீடுவாழ் கெனயாம்.
இவட்காப்பூச் சூடினும் எவட்காட்ட எனுமால்.
யாரினும் காதல மெனயார் யாரெனும்!
1315 இம்மைப் பிரியலம் எனக்கண் ணீர்மிகும்.
நினைந்தேன் எனமுன் மறந்தீர் என்றழும்.
வழுத்தினாள் தும்மினேன் எவர்நினைத் தெனுமால்!
தும்முச் செறுத்தேன் மறைத்திர்என் றழுமே!
தன்னை உணர்த்தினும் பிறர்க்குமின் னீர்எனும்!
1320 நினைத்துநோக் கினுங்காய்ந் தியாருள்ளி எனுமால்.

## 133 அதி. ஊடலுவகை

[ஊடுதல் காரணமாகக் கூடுதல் நிகழ்வதால் ஊடலை விரும்புதல்]

தவறிலார் ஊடல் அவரளி யாறு!
ஊடல் சிறுதுனி வாடினும் பாடுறும்.
நிலம்நீரன் னார்பால் புலத்தலின்ஒன் றுண்டு.
புல்லிவிடாப் புலவியின் உள்ளமுடை படைஎழும்.
1325 தவறில ராயினும் அகல்தலொன் றுடைத்து.
உணலினஃ தறல்போற் புணர்வின்ஊ டினிது.
ஊடலில் தோற்றவர் கூடலில் வெல்வர்.
ஊடிப்பெறு குவமோ கூடலில்தோன் றுப்பு.
ஊடுக ஒள்ளிழை ; நீடுக இரவே!
1330 ஊடலின் கூடி முயங்கல்இன் பம்பெறின்!

இன்பம் முற்றும்

**திருக்குறள்-நூற்பா என்னும் குட்டிக்குறள் முற்றிற்று.**

# அதிகார அடைவு



| | அதிகாரம் | பக்கம் | | அதிகாரம் | பக்கம் | | அதிகாரம் | பக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | கடவுள் | 1 | 27 | தவம் | 11 | 53 | சுற்றம் | 21 |
| 2 | மழை | | 28 | இழுக்கம் | | 54 | மறவி | 22 |
| 3 | துறவோர் | | 29 | களவு | 12 | 55 | செங்கோல் | |
| 4 | அறன் | 2 | 30 | வாய்மை | | 56 | கொடுங் | 23 |
| 5 | இல்லம் | | 31 | வெகுளி | 13 | 57 | வெருவந்த | |
| 6 | மனைவி | 3 | 32 | இன்னு | | 58 | கண்ணே | |
| 7 | மக்கள் | | 33 | கொலை | | 59 | ஒற்ரு | 24 |
| 8 | அன்பு | | 34 | நிலையா | 14 | 60 | ஊக்கம் | |
| 9 | விருந்து | 4 | 35 | துறவு | | 61 | மடி | 25 |
| 10 | இன்சொல் | | 36 | மெய்யு | 15 | 62 | ஆள்வினை | |
| 11 | நன்றி | 5 | 37 | அவா | | 63 | இடுக்கண் | |
| 12 | நடுவு | | 38 | ஊழ் | | 64 | அமைச் | 26 |
| 13 | அடக்கம் | | 39 | அரசன் | 16 | 65 | நாநலம் | |
| 14 | ஒழுக்கம் | 6 | 40 | கல்வி | | 66 | தூவினை | 27 |
| 15 | பிறன்மனை | | 41 | கல்லா | 17 | 67 | வினைத்தி | |
| 16 | பொறுமை | 7 | 42 | கேள்வி | | 68 | வினைசெய | |
| 17 | அழுக்காறு | | 43 | அறிவு | | 69 | தூது | 28 |
| 18 | வெஃகல் | | 44 | குற்றம் | 18 | 70 | மன்னர் | |
| 19 | இகழாமை | 8 | 45 | அறிஞர் | | 71 | குறிப்ப | 29 |
| 20 | பயனில்சொ | | 46 | சிற்றின | 19 | 72 | அவையறி | |
| 21 | தீவினை | 9 | 47 | ஆய்வினை | | 72 | அவையஞ் | |
| 22 | ஒப்புரவு | | 48 | வினைவலி | | 74 | நாடு | 30 |
| 23 | ஈகை | | 49 | காலம் | 20 | 75 | அரண் | |
| 24 | புகழ் | 10 | 50 | இடம் | | 76 | பொருள் | 31 |
| 25 | அருள் | | 51 | தெளி | 21 | 77 | படைமாட்சி | |
| 26 | புலால் | 11 | 52 | வினையாட் | | 78 | படைச்செ | |

| அதிகாரம் | | பக்கம் | அதிகாரம் | | பக்கம் | அதிகாரம் | | பக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 79 | நட்பு | 32 | 97 | மானம் | 39 | 115 | அலரறி | 47 |
| 80 | நட்புஆய் | | 98 | பெருமை | | 116 | பிரிவாற் | 48 |
| 81 | பழைமை | 33 | 99 | சான்ரு | 40 | 117 | படர் | |
| 82 | தீ நட்பு | | 100 | பண்பு | | 118 | கண்விது | |
| 83 | கூடாநட்பு | | 101 | நன்றியி | 41 | 119 | பசப்புறு | 49 |
| 84 | பேதை | 34 | 102 | நாணு | | 120 | தனிப் | 50 |
| 85 | புல்லறிவு | | 103 | குடிசெய | | 121 | நினைந்த | |
| 86 | இகல் | 35 | 104 | உழவு | 42 | 122 | கனவு | 51 |
| 87 | பகைமாட்சி | | 105 | வறுமை | | 123 | பொழுது | |
| 88 | பகைத்திறம் | | 106 | இரவு | 43 | 134 | உறுப்பு | 52 |
| 89 | உட்பகை | 36 | 107 | இரவச் | | 125 | நெஞ்சொ | |
| 90 | பெரியோர் | | 108 | கயமை | | 126 | நிறை | 53 |
| 91 | பெண்வ | 37 | 109 | தகை | 44 | 127 | அவர்வயி | |
| 92 | விலைமகளிர் | | 110 | குறிப் | 45 | 128 | குறிப்பு | 54 |
| 93 | கள் | | 111 | கூடிமகிழ் | | 129 | புணர்ச்சி | |
| 94 | சூது | 38 | 112 | நலம் | 46 | 130 | நெஞ்சு | 55 |
| 95 | மருந்து | | 113 | காதல் சிற | | 131 | புலவிநு | |
| 96 | குடிமை | 39 | 114 | நாணு | 47 | 132 | புலவி | 56 |
| | | | | | | 133 | ஊடலுவ | |



## பிழை திருத்தம்

| பக்கம் | அதி | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 9 | 22 | 1 | குலதெ | உலகுள |
| 22 | 54 | 9 | மறந் | மகிழ்ந் |
| 23 | 56 | 2 | கெடுகி | கொடுள |
| 23 | 57 | 8 | சீரில் | சீறில் |
| 30 | 74 | 8 | உறு | உரு |
| 42 | 104 | 1 | துழன்றும் | துலகம் |
| 42 | 104 | 1 | உழழவு | உழவு |
| 42 | 104 | 6 | தர்க் | தார்க் |

இந்நூலைப் பற்றிய

## கருத்துக் கதிர்கள்

Mr. Sivaprakasam's composition is on lines of the Champu Works for our great Sanskrit classics and helps to inculcate knowledge of the originals in an easy way in young ones. * *

—**THE HINDU** : *March 14, 1948.*

* * *

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை பிள்ளை M A; M O L etc,

முப்பால் ஏட்டுக்கு ஏற்புடைய ஒரு 'கொளு'த் தொகுதியாக இவ் ஏடு இனிய செறிவும் செப்பமும் மிக்க ஆசிரிய அடிகளான் அமைந்துள்ளது. புலமையுலகும் தமிழகமும் இதனை விரும்பி வரவேற்கும் என்பதில் ஐயமில்லை.

* * *

**Rao Bahadur, Thanigai Mani**

**V. S. Chengalvaraya Pillai M. A.**

" * * There is no doubt that the work would be a rich addition to the Tamil Literature, receiving approbation from the Tamil Lovers all over the world and Proving useful to the young and the old alike.

* * *

**வித்வான்-அந்தணர் க. நடேச உடையார் அவர்கள்**

முன்னைத் தமிழ்ப் பேராசிரியர், சேலம் கல்லூரி, சேலம்,

'குட்டிக் குறள்' ஆசிரியர் திரு. சுகவனம்-சிவப்பிரகாசம் அவர்களை இந்நாள் தமிழறிஞர் பலரும் நன்கறிவர். இவர்களையும் நூலையும் சிறப்பித்து ஐயரவர்கள்-மகாமகோபாத்தியாயர் டாக்டர் உ. வே. சுவாமிநாத ஐயரவர்கள்—சிதம்பரம் மீனாட்சி தமிழ்க் கல்லூரியில் மாணவர்கட்குத் தமிழ் கற்பிக்கும்போது, 1926-ஆம் ஆண்டில், ஒரு நாள் ஒருசில மொழிந்தார்கள். அதனைஅப்போது ஐயரவர்களிடம் தமிழ் பயின்றுகொண்டிருந்த நாங்கள் கேட்டதுண்டு. * *

**Sri. A, Balakrishna Pillai** B. A. M. L.

**Formerly Seeretary to the H R E Boards Madras,**

* * This Kural-let, if I may so call it is an extra-ordinary piece of achievement testifying to his literary ideal and true scholarship. I have no doubt that this work is a great success and will be studied by young and old with advantage. And I am happy to congratulate the Auther and the publisher for their innate sence of the uudying truths so beautlfully formulated in Kural.

* * *

"செந்தமிழ்ச் செல்வி" சென்னை, சிலம்பு 33 பரல் 5 ஜனவரி-1959,

" * * திருக்குறள் நூலினை எல்லாரும் எளிதாகவும் இனிதாகவும் உணருமாறு நூன் முழுவதற்கும் அமையும் பாயிரம் போன்று ஒவ்வொரு திருக்குறளுக்கும் ஒல்வொரு தனிப் பாயிரமாக இந்நூல் அமைந்துள்ளது.

அதன் அமைப்பு வியத்தொறும் வியத்தொறும் வியப் பிறந்து, சொல்லொணு வீறுடன் விளங்கும் இயல்பிற்று.

இதனைக் கற்பார் இரு பெரும் பயனை ஒருங்கு எய்துவர். ஒன்று இதற்கு முதனூலாகிய திருக்குறளை ஆராக் காதலுடன் தேடிக் கற்பது; மற்ருென்று நெய்யின் உறு சுவையாக எய்திய இதனை மறவாதொழுகுவது. * *"

* * *

Thirukkural is a book wich not many might have read while a few might have studied. It is a book for select few; mainly beause the verses are a bit terse and easily understandable except with a guide. "Kuttikkural" is a simplified version of Thirukkural.

The ambition of the author to make the ordinary men and women understand the writings of Valluvar and profit by it has been realised magnificently.

THE LIBERATOR, 5–5–48.

# சுகவனம் - சிவப்பிரகாசனுர்

அறநூல் (உரையாசிரியர்கள் :
கி. வா. ஜகந்நாதன், சிவ. மாசிலாமணி)

சாதாப் பதிப்பு ... 3.50

உயரிய பதிப்பு ... 4.00

குட்டிக் குறள் [நூற்பா - ௱] (உரையாசிரியர்கள் :
இளவழகனுர், கி. வா. ஜகந்நாதன்)

அடக்கப் பதிப்பு ... 1.00

## ஆ. பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பு

### திரு அருட்பா

| | |
|---|---|
| கீர்த்தனைப் பகுதி | 0.75 |
| வசனப் பகுதி | 3.50 |
| வியாக்யானப் பகுதி | 1.25 |
| பெருநூல் பகுதி | 3.50 |
| திருஒற்றியூர்ப் பகுதி | 4.25 |
| திருத்தணிகைப் பகுதி | 2.50 |
| பூர்வஞான சிதம்பரப் பகுதி | 3.00 |
| உத்தரஞான சிதம்பரப் பகுதி | 4.00 |
| சித்திவளாகப் பகுதி | 4.75 |
| உபதேசப் பகுதி | 3,00 |
| திருமுகப் பகுதி | 3.50 |
| தனிப்பாசுரப் பகுதி | 2.50 |

கிடைக்குமிடம் :

# பாரி நிலையம்

59, பிராட்வே :: சென்னை - 1


Jacket Printed at Neo Art Press, Madras-2